இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 65 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – புரட்டாசி 27 – சனிக்கிழமை 14 அக்டோபர் 2023 – கோவை ★★ 12 பக்கங்கள்

Established : 10.8.1942 - Volume : 82 - Issue 65: Thiruvalluvar Year - 2054 - Purattasi 27 - Saturday 14 October 2023 - Kovai ★★ 12 Pages ₹ 5.00

## ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ள

# தமிழ்நாடு முதலிடத்துக்கு முன்னேற வேண்டும்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 20 வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 9 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார். இவ்விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதிமாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு. எழிலன், இ. பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே. சிற்றரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர்கள் அசோக் சிகாமணி, இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## பதக்கங்கள் வென்ற வீரர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கி

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, அக். 14-**

**“ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு முதலிடத்துக்கு முன்னேற வேண்டும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த வீரர், வீராங்கனைகளுக்கு உரிய ஊக்கத் தொகையை வழங்கி உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19 வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்தவீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத் தொகை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு :-

19வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த வீரர் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்கக்கூடிய விழாவில் பங்கேற்றிருக்கக்கூடிய,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுத்து பதக்கங்களைப் பெற்ற வீரர்களுக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவிப்பதற்காக நாம் இங்கே கூடி இருக்கிறோம்.

இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு இந்திய விளையாட்டு வீரர்கள் பல்வேறு பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக நமது தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் அதிக பதக்கங்களைப் பெற்றுள்ளார்கள் என்பது நமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது.

**இந்திய அளவில் தமிழ்நாடு 5-வது இடம்!**

இந்தியா மொத்தமாக வென்ற 107 பதக்கங்களில், தமிழ்நாட்டைச் சேர்ந்த வீரர்கள் மட்டும் 28 பதக்கங்களைப் பெற்றுள்ளனர். இந்திய அளவில் பார்த்தால் நமது மாநிலம் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ளது.

பல்வேறு பதக்கங்களை வென்ற 20 விளையாட்டு வீரர்களுக்கு இன்று 9 கோடியே 40 லட்சம் ரூபாய் உயரிய ஊக்கத்தொகை பரிசுகள் வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

அகில இந்திய அளவிலே, உலகளவிலான போட்டிகளில் தொடர்ந்து உங்களது பங்களிப்பை செலுத்துமாறு நான் கேட்டுக் கொள்கிறேன். தொடர்ச்சியான பதக்கங்கள் பெறுவதும், தொடர் வெற்றிகளைப் பெறுவதும்தான் உங்களுக்கும் பெருமை; நமது தமிழ்நாட்டுக்கும் பெருமை; ஏன் இந்தியாவிற்கே பெருமை!

இந்தப் பாராட்டு உங்களுக்கும் உங்களது வெற்றிக்கும் மட்டுமல்ல; நீங்கள் இன்னும் பல வெற்றிகளைப் பெற வேண்டும் என்று ஊக்கமளிக்கவும் உங்களைப் போல இன்னும் பல வீரர்கள் உருவாக அடித்தளமாக அமைய வேண்டும் என்பதற்காகவும்தான். உங்களைப் பார்த்து இன்னும் ஏராளமான வீரர்களும் வீராங்கனைகளும் உருவாவார்கள் என நம்புகிறேன்.

எந்தவொரு அரசாக இருந்தாலும், ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஒரு சில துறைகளில் மட்டும் அதிக கவனம் செலுத்தும். ஆனால் நம்முடைய திராவிட மாடல் அரசானது, அனைத்துத் துறைகளிலும் அதிகக் கவனம் செலுத்துவதன் மூலமாக, அனைத்துத் துறைகளையும் ஒருசேர வளர்த்து வந்து கொண்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக சில துறைகள் ஸ்டார் துறைகளாக வளர்ந்து வருகின்றன. அதில் விளையாட்டுத் துறையும் ஒன்று!

இந்தத் துறையின் அமைச்சர் ஒரு ஸ்டாராக இருப்பதால், இந்த துறையும் ஸ்டார் துறையாக வளர்ந்துவிட்டது. விளையாட்டுத் துறையின் மூலமாக, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் எழுச்சி பெற்று வருகிறது. நாள்தோறும் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான விளையாட்டுத் துறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும், அமைச்சர் உதயநிதி அவர்கள் நடந்து அல்ல, ஓடிக் கொண்டே இருக்கிறார்.

அந்தத் துறையின் கேப்டனாக இருந்து, அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவருக்கும் அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

### ஸ்டார் துறையின் ஸ்டார் அமைச்சர்!



**இந்தத் துறையின் அமைச்சர் ஒரு ஸ்டாராக இருப்பதால், இந்த துறையும் ஸ்டார் துறையாக வளர்ந்துவிட்டது. விளையாட்டுத் துறையின் மூலமாக, விளையாட்டு வீரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இளைய சமுதாயமும் எழுச்சி பெற்று வருகிறது. நாள்தோறும் தமிழ்நாடு முழுவதும் ஏராளமான விளையாட்டுத் துறை நிகழ்ச்சிகள் நடந்து கொண்டே இருக்கின்றன. அதிலும், அமைச்சர் உதயநிதி அவர்கள் நடந்து அல்ல, ஓடிக் கொண்டே இருக்கிறார்.**

**அந்தத் துறையின் கேப்டனாக இருந்து, அனைத்து வகை விளையாட்டு வீரர்களையும் சாம்பியன்களாக ஆக்கிக் கொண்டு இருக்கிறார் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். அவருக்கும் அவரது துறையைச் சார்ந்த உயரதிகாரிகளுக்கும் அலுவலர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.**

## தமிழ்நாடு அரசின் மாற்றுத் திறனாளிகளுக்கான ‘அனைத்தும் சாத்தியம்’ அருங்காட்சியகத்திற்கு

# தேசிய மையத்தால் “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்து!

**சென்னை, அக். 14-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (12.10.2023) தலைமைச் செயலகத்தில், Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலை வாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் (National Centre for Promotion of Employment for Disabled People) 28.09.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட விருதினை மாற்றுத் திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ) சுன்சோங்கம் ஜடக் சிரு, காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் சென்னை, காமராஜர் சாலையில் உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அலுவலகத்தில் ரூ.1 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள “அனைத்தும் சாத்தியம்” என்றமாற்றுத்திறனாளிகளுக்கான அருங்காட்சியகத்தை தமிழ்நாடு முதல்வர் அவர்கள் 6.6.2022 அன்று திறந்து வைத்தார்.

“அனைத்தும் சாத்தியம்” என்ற அருங்காட்சியகமானது மாற்றுத் திறனாளிகள் உபயோகப்படுத்தும் 200க்கும் மேற்பட்ட உதவி உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட பொருட்கள்அங்குவருகைபுரிபவர்களுக்கு அவர்கள் தனிச்சையாக வாழ்வதற்கு ஏதுவாக காட்சிப் பொருட்களாக வைக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த அருங்காட்சியகத்தில் மாற்றுத்திறனாளிகள் அணுகக்கூடிய இல்லம், வேலை செய்யும் இடத்தில் தேவைப்படும் உபகரணங்கள் மற்றும் அவர்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்டு ஓய்வு நேரங்களில் பயன்படுத்தும் பொருட்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்புமிக்க தமிழ்நாடு அரசின் மாற்றுத்திறனாளிகளுக்கான “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு புதுதில்லியில் 28.9.2023 அன்று Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில் வழங்கப்பட்ட விருதினை,

மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர், மாற்றுத்திறனாளிகள் அருங்காட்சியகத்தின் ஒருங்கிணைப்பாளர்களுடன் பெற்றுக்கொண்டார்.

இந்த நிகழ்வின்போது, சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர், “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத் தலைவர் திருமதி பூணம் நடராஜன், மேலாளர் ஏ.பிரபாகரன், கூடுதல் மேலாளர் திருமதி ஷிவானி, பேச்சு பயிற்சியாளர் திருமதி காபா நாசியா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சீனாவில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற -

# தமிழ்நாட்டின் 20 விளையாட்டு வீரர்களுக்கு ரூ.9.40 கோடி ஊக்கத் தொகை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக்.14-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) சென்னையில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறையின் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற விழாவில், சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டை சார்ந்த 20 வீரர் - வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக 9 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கி, வாழ்த்தினார்.

கடந்த 23.09.2023 முதல் 8.10.2023 வரை சீன நாட்டின் ஹாங்சூவில் நடைபெற்ற 19-வது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்திய அணி சார்பில் தமிழ்நாட்டைச் சேர்ந்த 48 வீரர், வீராங்கனைகள் பங்கேற்றனர். இதில் 20 வீரர், வீராங்கனைகள் 9 தங்கம், 11 வெள்ளி மற்றும் 8 வெண்கலம் என மொத்தம் 28 பதக்கங்களை வென்றனர்.

ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்கள் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த விளையாட்டுவீரர்மற்றும்வீராங்கனைகளின் விவரங்கள்

19-வது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த - தடகளப் போட்டியில் 1 தங்கம் மற்றும் 1 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற ராஜேஷ் ரமேஷ், 2 வெள்ளிப் பதக்கங்கள் வென்ற சுபா வெங்கடேசன், 2 வெள்ளி மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற வித்யா ராம்ராஜ், டிரிப்பிள் ஜம்ப் போட்டியில் 1 வெண்கலப் பதக்கம் வென்ற பிரவின் சித்ரவேல், துப்பாக்கிச் சுடும் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற பிரதிவிராஜ் தொண்டைமான்;

ஸ்குவாஷ் போட்டிகளில் 1 தங்கம் மற்றும் 1 வெள்ளி பதக்கங்கள் வென்ற சவ்ரவ் கோஷல், 2 தங்கப் பதக்கங்கள் வென்ற ஹரிந்தர் பால் சிங் சந்து, 1 தங்கம் மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற அபய் சிங், 1 தங்கம் மற்றும் 1 வெண்கலப் பதக்கங்கள் வென்ற தீபிகா பல்லிகல் கார்த்திக், 1 வெண்கலப் பதக்கம் வென்ற ஜோஷ்னா சின்னப்பா;

டென்னிஸ் போட்டியில் 1 வெள்ளிப் பதக்கம் வென்ற ராம்குமார் ராமநாதன், ரோலர் ஸ்கேட்டிங் போட்டியில் தலா 1 வெண்கலப் பதக்கம் வென்ற வி. ஆனந்த் குமார், ஆர்த்தி கஸ்தூரிராஜ் மற்றும் ஜெ. கார்த்திகா, சதுரங்கப் போட்டியில் தலா 1 வெண்கலப் பதக்கம் வென்ற டி. குகேஷ், பிரக்ஞானந்தா, ஆர். வைஷாலி மற்றும் பி. சவிதா ஸ்ரீ, கிரிக்கெட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய அணியில் இடம் பெற்ற சாய் கிஷோர் மற்றும் வாஷிங்டன் சுந்தர் ஆகிய 20 விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு உயரிய ஊக்கத்தொகையாக மொத்தம் 9 கோடியே 40 இலட்சம் ரூபாய்க்கான காசோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கி வாழ்த்தினார்.

இவ்விழாவில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், இ.பரந்தாமன், துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் நே.சிற்றரசு, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் துணைத் தலைவர்கள் அசோக் சிகாமணி, இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காவிரி விவகாரத்தில் சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட

# முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை ஒன்றிய அரசுக்கு அனுப்ப முடிவு!

*சென்னை, அக்.14-*

*காவிரி விவகாரத்தில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் நிறைவேற்றப்பட்ட முதலமைச்சரின் தனித் தீர்மானத்தை ஒன்றிய அரசுக்கு அனுப்ப முடிவு செய்யப்பட்டுள்ளது.*

*உச்சநீதிமன்ற இறுதித் தீர்ப்பில் வரையறுக்கப் பட்டபடி காவிரியில் கர்நாடக அரசு உரிய நீரை திறந்து விட ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தமிழ்நாடு சட்டப்பேரவையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த 9ந் தேதி திங்கட்கிழமை அரசினர் தனித்தீர்மானம் கொண்டு வந்தார்.*

*முதலமைச்சர் கொண்டு வந்த தனி தீர்மானம் சட்டப்பேர வையில் ஒருமனதாக நிறைவேறியது. தமிழ்நாட்டு மக்களின் உணவுத் தேவைக்கான மட்டுமல்ல மனித உயிர்களின் உயிர்த் தேவைக்கு அவசியமானது காவிரி நீர்! அதனைத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பெற்றுத் தருவதில் எந்தச் சூழலிலும் விட்டுக் கொடுக்காமல் வாதிட்டுப் பெற்றுத் தருவோம் என்றும் அந்த தீர்மானத்தில் தெரிவிக்கப் பட்டது.*

*காவிரி விவகாரத்தில் ஒன்றிய அரசு முறையாகச் செயல்பட்டுத் தமிழ்நாட்டு மக்களுக்கு காவிரி நீரைப் பெற்றுத் தர வேண்டும் என்றும் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டது.*

*இந்நிலையில், பேரவையில் நிறைவேற்றப் பட்ட தனித்தீர்மானம் பேரவைச் செயலகம் மூலம் தலைமைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, பின்னர் ஒன்றிய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.*

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 14-10-2023

# பழனிசாமியின் காவிரி துரோகங்கள் 2

**கா**விரி நடுவர் மன்றத்தின் இறுதித்தீர்ப்பு 5.2.2007 அன்று வந்தது. அப்போது தமிழகத்தில் தி.மு.க. ஆட்சியே இருந்தது. இந்த இறுதித் தீர்ப்பில் தமிழகத்தின் பாசனப் பரப்பு 4,56,130 ஏக்கர் விடுபட்டு இருந்தது. இதனைக் கழக அரசு கடுமையாக எதிர்த்தது. உடனடியாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை கூட்டினார் முதல்வர் கலைஞர். அ.தி.மு.க.வும் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டது. காவிரி பாசன விவசாயிகளின் பாரம்பர்ய உரிமையைக் காக்க காவிரி மன்ற இறுதித் தீர்ப்பில் கூடுதலாக 60 டி.எம்.சி. நீர் கோரி 2007 ஆம் ஆண்டு மே மாதம் உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் ஒரு சிறப்பு முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

**உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்கிறோம் என்றால் என்ன பொருள்? காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை நாம் ஏற்கவில்லை என்று பொருள். உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் போது ஆட்சி மாற்றம் ஏற்படுகிறது. முதல்வர் ஜெயலலிதா, அந்த வழக்கை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பை அரசிதழில் வெளியிட வேண்டும் என்று வழக்குப் போட்டார். அதாவது இறுதித் தீர்ப்பை ஏற்றுக் கொள்வதே இதன் பொருள். முதல் சறுக்கல் இது.**

இதன்படி அரசிதழில் 19.2.2013 அன்று வெளியானது. இதனையே தனது பெரிய சாதனையாகச் சொல்லிக் கொண்டார். ஜெயலலிதா மரணம் அடையும் வரை அந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவில்லை. பழனிசாமி முதலமைச்சராக இருக்கும் போதுதான் இறுதி விசாரணைக்கு வந்தது.

2017 ஆம் ஆண்டு ஜுலை 10, செப்டம்பர் 20 ஆகிய இரண்டு நாட்களும் விசாரணை நடந்தது. இங்குதான் பழனிசாமி அரசின் கையாலாகாத்தனம் வெளிப்பட்டது. சரியான வாதங்களை வைத்து அரசு வாதாடவில்லை. காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பில் இரண்டு முக்கியமான கருத்துருக்கள் உள்ளன.

**1. நிலத்தடி நீர் பயன்பாட்டை காவிரி நதியின் நீர் உபயோகமாகக் கருதக்கூடாது.**

**2. குடிநீர், தொழிற்சாலை, உள்ளாட்சி ஆகியவற்றுக்காக தண்ணீரைப் பயன்படுத்தினால் அந்தத் தண்ணீர் அந்தந்த மாநில கணக்கீட்டில்தான் சேர்க்கப்படும். - என்று இறுதித்தீர்ப்பில் உள்ளது. அதை வைத்து பழனிசாமி அரசு வாதங்களை வைக்கவில்லை.**

**தனக்கு நிலத்தடி நீர் குறைந்துவிட்டதாக கர்நாடக அரசு வாதங்களை வைத்ததை பழனிசாமி அரசு மறுக்கவில்லை. தமிழகத்துக்கு நிலத்தடி நீர் வளம் உள்ளதாகச் சொல்லி 10 டி.எம்.சி. குறைக்கப்பட்டதை பழனிசாமி அரசு கேள்வி எழுப்பவில்லை. காவிரி நடுவர் மன்ற இறுதித்தீர்ப்பின் கருத்துருவைச் சொல்லி வாதிடவில்லை பழனிசாமியின் அரசு.**

பெங்களூரு மாநகர குடிநீர்த் தேவை குறித்து கர்நாடக அரசு வாதம் வைத்ததுபோல சென்னை, சேலம், ஈரோடு, தஞ்சை, திருச்சி ஆகிய மாநகராட்சிகளின் தண்ணீர்த் தேவையை பழனிசாமி அரசு சொல்லி வாதங்களை வைத்திருக்க வேண்டும். மேலும் இராமநாத புரம், தருமபுரி கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின் தேவையையும் சொல்லி இருக்க வேண்டும். எதையும் செய்யவில்லை.

உச்சநீதிமன்றத்தில், 60 டி.எம்.சி. கூடுதலாகக் கேட்டு முதல்வர் கலைஞர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்டது வழக்கு. ஆனால் கிடைத்த 192 டி.எம்.சி.யில் 14.75 டி.எம்.சி.யை இழந்ததுதான் பழனிசாமியின் சாதனை ஆகும்.

“தமிழக அரசின் மனுவில் என்ன சொல்லப்பட்டு இருந்ததோ அதைக் கூட நீதிமன்றத்தில் சொல்லி வாதங்களை வைக்கவில்லை. தமிழக அரசின் வழக்கறிஞர் பேசுவதும், மனுவில் உள்ளதும் வேறு வேறாக இருக்கிறதே” என்று நீதிபதிகளே சொன்னார்கள். இப்படி அலட்சியமாக வழக்கை நடத்திய அரசுதான் அ.தி.மு.க. அரசு. வழக்கின் இறுதித் தீர்ப்பு 2018 ஆம் ஆண்டு வந்தது.

அதன்படி காவிரி ஆணையம் அமைக்கப்பட்டு உடனடியாக நீர்ப் பிரச்சினை முறைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும். அதனை ஒன்றிய பா.ஜ.க. அரசு செய்யவில்லை. பா.ஜ.க.வை செய்ய வைக்க பழனிசாமியால் முடியவும் இல்லை. ஒன்றிய பா.ஜ.க. அரசு அதிகாரமற்ற ஒரு அமைப்பைத் தொடங்கியது. அதனை எடப்பாடி அரசு தட்டிக் கேட்கவில்லை. ஒன்றிய அரசின் ஜல்சக்தித் துறையோடு இதனைச் சேர்த்து விட்டார்கள். அதையும் எடப்பாடி அரசு தட்டிக் கேட்கவில்லை. இதைவிட பழனிசாமியின் பச்சைத் துரோகம் என்ன இருக்க முடியும்?

இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு, ‘காவிரி காப்பாளர்’ என்ற பட்டத்தை தனக்குத் தானே கொடுத்துக் கொண்டார் பழனிசாமி. ‘டெல்டா விவசாயிகளின் கோரிக்கையை நிறைவேற்றியதால் காவிரி காப்பாளர் என்ற பட்டத்துக்கு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி மிகவும் பொருத்தமானவர்’ என்று அன்றைய ஆளுநர் பன்வாரிலால் புரோகித்தை தமிழ்நாடு சட்டமன்றத்தில் சொல்ல வைத்துக் கொண்டார் பழனிசாமி.

கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மிகச் சரியாக ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதா என்றால் இல்லை. 2020 - இந்த ஒரு ஆண்டு மட்டும் தான் ஜூன் 12 அன்று திறந்துள்ளார்கள்.

2012 முதல் அ.தி.மு.க. ஆட்சியில் மேட்டூர் அணை திறந்த நாட்கள் இவை -

* செப்டம்பர் 17
* ஆகஸ்ட் 2
* ஆகஸ்ட் 10
* ஆகஸ்ட் 9
* செப்டம்பர் 20
* அக்டோபர் 2
* ஜுலை 19

* ஆகஸ்ட் 13 - என 2012 ஆம் ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் தங்கள் விருப்பப்படி விவசாயிகளைப் பற்றிய எந்தக் கவலையும் இல்லாமல் தான் தண்ணீரைத் திறந்து விட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட பழனிசாமிதான் காவிரி காப்பாளராக தன்னைக் காட்டிக் கொண்டார். மயிலாடுதுறையில் நடந்த காவிரி புஷ்கரம் விழாவில் கலந்து கொண்டு புனித நீராடினார் பழனிசாமி. பச்சைத் துண்டு போட்டுக் கொண்டார். மாட்டு வண்டியில் அழைத்து வரப்பட்டார். ‘நானும் ஒரு விவசாயி’ என்றார். ‘விவசாயி நாடாள்வது சிலருக்குப் பிடிக்கவில்லை’ என்றார். இவை அனைத்தும் பம்மாத்து நாடகங்கள் என்பது தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரியும். தெரிந்தேதான் மக்கள் அவரை ஆட்சியை விட்டு இறக்கினார்கள்.

எனவே, பழனிசாமி பழைய பொய்களை அவிழ்த்துவிடத் தேவையில்லை. அவை ஊர் சிரித்த பொய்கள்தான்!

## ககன்யான் விண்கலத்தின் முதல்கட்ட சோதனை! வரும் 21 ம் தேதி நடைபெறும்!

*பெங்களூரு, அக். 14 -*

*மனிதர்களை விண்கலம் மூலம் பூமியின் சுற்றுவட்டப் பாதையின் 400 கிலோ மீட்டர் தொலைவுக்கு கொண்டுசென்று, பாதுகாப்பாக மீண்டும் பூமிக்கு கொண்டுவரும் ககன்யான் திட்டம் அடுத்தாண்டு செயல்படுத்தப்பட உள்ளது.*

*இதற்கான பல்வேறுகட்ட சோதனைகளை இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது. விண்கலத்தை ராக்கெட் மூலம் விண்ணுக்கு அனுப்பும் முதல் கட்ட சோதனை வரும் 21ம் தேதி நடைபெற இருக்கிறது.*

*ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து ககன்யான் திட்ட விண்கலத்தை விண்ணுக்கு அனுப்பி சோதிக்கப்படும் என்று ஒன்றிய அறிவியல் தொழில்நுட்பத் துறை தெரிவித்துள்ளது. ககன்யான் விண்கலம் ராக்கெட் மூலம் விண்வெளிக்கு கொண்டு செல்லப்பட்டு, மீண்டும் பூமிக்கு கொண்டுவரப்படும். வங்கக் கடல் பகுதியில் விழும் இந்த விண்கலம், இந்திய கடற்படையினர் மூலம் மீட்கப்படும். விண்கலம் விண்ணை நோக்கிப் பயணிக்கும் போது, ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால், அதிலிருந்து விண்வெளி வீரர்கள் வெளியேறுவதற்கான சோதனையும் நடத்தப்படுகிறது.*



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (12.10.2023) தலைமைச் செயலகத்தில், Mphasis மற்றும் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பு மேம்பாட்டிற்கான தேசிய மையத்தால் (National Centre for Promotion of Employment for Disabled People) 28.09.2023 அன்று புதுதில்லியில் நடைபெற்ற “உலகளாவிய வடிவமைப்பு” விருதுகள் 2023 நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசின் “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத்திற்கு வழங்கப்பட்ட விருதினை மாற்றுத்திறனாளிகள் நலத்துறை முதன்மைச் செயலாளர் (மு.கூ.பொ) சுன்சோங்கம் ஜடக் சிரு, காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி.கீதாஜீவன், மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் ஏ.கே.கமல் கிஷோர், “அனைத்தும் சாத்தியம்” அருங்காட்சியகத் தலைவர் திருமதி பூணம் நடராஜன், மேலாளர் ஏ.பிரபாகரன், கூடுதல் மேலாளர் திருமதி ஷிவானி, பேச்சு பயிற்சியாளர் திருமதி காபா நாசியா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் மாநில விலங்கான - வரலாற்றுச் சிறப்புமிக்க

# நீலகிரி வரையாடு திட்டம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

## மாணவர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு புத்தகங்களை வழங்கினார் முதல்வர்!

**சென்னை, அக். 14-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்தார். மேலும், பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு வரையாடு பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் புத்தகங்களை வழங்கினார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) தலைமைச் செயலகத்தில், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறையின் சார்பில் தமிழ்நாட்டின் மாநில விலங்கான வரையாட்டினை பாதுகாப்பதற்காக, தமிழ்நாடு அரசின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஒரு முன்னோடித் திட்டமான நீலகிரி வரையாடு திட்டத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன், ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் மற்றும் வனப் பாதுகாவலர் எஸ்.ராமசுப்ரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என்.ஜெயராஜ், நீலகிரி வரையாடு பற்றிய குறும்படத்தை தயாரித்த பிரவீன் சண்முகானந்தம் மற்றும் தனுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**நீலகிரி வரையாடு மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் வாழ்கிறது!**

“வரையாடு” என்று மக்களால் பரவலாக அழைக்கப்படும் “நீலகிரி வரையாடு” என்பது மேற்குத் தொடர்ச்சி மலையில் காணப்படும் அழிந்து வரும் இனமாகும். இது புவிஈர்ப்பு விசைக்கெதிராக கடினமான குன்றின் மீது ஏறும் திறன்களுக்காக புகழ் பெற்றது. இந்த மலை ஆடுகளை “மவுண்டன் மோனார்க்” என்று அழைக்கிறார்கள்.

2000 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் சங்க இலக்கியங்களில் நீலகிரி வரையாட்டைப் பற்றிய பல குறிப்புகள் உள்ளன. சங்க காலத்தின் ஐம்பெரும் காப்பியங்களில், சிலப்பதிகாரம் மற்றும் சீவகசிந்தாமணியில், நீலகிரி வரையாடு மற்றும் அதன் வாழ்விடம் பற்றிய விளக்கங்கள் இடம்பெற்றுள்ளது.

**நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக அறிவிப்பு!**

மேலும், பதினெண்மேல்கணக்கு நூல்களான நற்றிணை, ஐங்குறுநூறு, பரிபாடல், பதிற்றுப் பத்து, பட்டினப்பாலை போன்ற நூல்களில் நீலகிரி வரையாடு பற்றி விளக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. கி.பி 1600-1700இல் திரிகூட ராசப்பக் கவிராயரால் எழுதப்பட்ட குற்றாலக் குறவஞ்சி என்ற நாடகத்தில் நீலகிரி வரையாடு குறித்து “குறத்தி மலை வளம் கூறல்” என்ற பாடலில் விவரிக்கப்பட்டுள்ளது, வரையாடு இப்பகுதியின் பல்லுயிர் செழுமையைக் குறிக்கும் விலங்குகளில் ஒன்றாகும்.

தமிழ்நாட்டில் அதன் சுற்றுச்சூழல் மற்றும் கலாச்சார முக்கியத்துவத்திற்கு சான்றாக, நீலகிரி வரையாடு தமிழ்நாட்டின் மாநில விலங்காக அறிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரி வரையாடு திட்டமானது, நீலகிரி வரையாடு பற்றிய எண்ணிக்கை, விநியோகம் மற்றும் சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை உருவாக்குதல்; நீலகிரி வரையாட்டின் வரலாற்று வாழ்விடங்களை மீண்டும் அறிமுகப்படுத்துதல்; நீலகிரி வரையாட்டிற்கு உள்ள அச்சுறுத்தலை நிவர்த்தி செய்தல்; “நீலகிரி வரையாடு” இனங்கள் பற்றிய விழிப்புணர்வை பொதுமக்களிடையே அதிகரிக்கச் செய்தல்; நீலகிரி வரையாடு தினம் 1975 இல் நீலகிரி வரையாடு பற்றிய முதல் ஆய்வுகளில் முன்னோடியாக இருந்த டாக்டர் ஈ.ஆர்.சி டேவிதாரின் பிறந்த நாளான அக்டோபர் 7 ஆம் நாள் நீலகிரி வரையாடுதினமாக அவரை சிறப்பிக்கும் வகையில் கொண்டாடப்பட்டு வருகிறது; “நீலகிரி வரையாடு” உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் சுற்றுச்சூழல் சுற்றுலா நடவடிக்கைகளை உருவாக்குதல்; பள்ளி மாணவர்களுக்கு நீலகிரி வரையாடு குறித்த பாடங்களை உருவாக்குதல் ஆகிய நோக்கங்களைக் குறிக்கும் வகையில் டிசம்பர், 2022ல் அரசாணை வெளியிடப்பட்டது.

**ரூ.25 கோடி செலவில் பாதுகாப்பு நடவடிக்கைகள்!**

இந்தத் திட்டம் ரூ.25 கோடி செலவில், நீலகிரி வரையாடுகளின் எண்ணிக்கை, பரவல் மற்றும் சூழலியல் பற்றிய சிறந்த புரிதலை மேம்படுத்துதல், வரையாடுகளின் வரம்பு முழுவதும் தரப்படுத்தப்பட்ட முறைகளை பயன்படுத்தி ஒத்திசைக்கப்பட்ட கணக்கெடுப்புகள் நடத்துதல், நீலகிரி வரையாட்டினை மறு அறிமுகம் செய்தல் மற்றும் கண்காணிப்பு, பாதிக்கப்பட்ட வரையாடுகளுக்கு நோய் கண்டறிதல் மற்றும் சிகிச்சை அளித்தல், பணியாளர்களுக்குகள உபகரணங்கள் மற்றும் பயிற்சி அளித்தல், மேல் பவானியில் உள்ள சோலா புல்வெளியில் முன்னோடியான மறுசீரமைப்பு பணி மேற்கொள்ளுதல், சூழல் சுற்றுலா திட்டங்களை செயல்படுத்துதல், தகவல் தொடர்பு மற்றும் எல்லை போன்றவை குறித்த முக்கிய நடவடிக்கைகளில் கவனம் செலுத்தப்படும்.

நீலகிரி வரையாடு திட்டப்பணிகளை செயல்படுத்த திட்ட அலுவலகம் கோயம்புத்தூரில் அமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முழு நேர முதல் திட்ட இயக்குனரையும் அரசு நியமித்து ஆணை வெளியிட்டு, பல்வேறு திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நான்கு முதுநிலை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஒரு மூத்த விஞ்ஞானியையும் நியமனம் செய்துள்ளது.

இந்நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் மருத்துவர் எம்.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் தலைமை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாஸ் ஆர்.ரெட்டி, கூடுதல் முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் வீ.நாகநாதன், ஆனைமலை புலிகள் காப்பகத்தின் கள இயக்குநர் மற்றும் வனப் பாதுகாவலர் எஸ். ராமசுப்ரமணியன், கோயம்புத்தூர் மாவட்ட வன அலுவலர் என். ஜெயராஜ், நீலகிரி வரையாடு பற்றிய குறும்படத்தை தயாரித்த பிரவீன் சண்முகானந்தம் மற்றும் தனுபரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை

முதல் பக்கத் தொடர்ச்சி...

கடந்த இரண்டரை ஆண்டுகளில் இந்த துறை உலகமே வியந்து பார்க்கும் பல்வேறு சாதனைகளைச் செய்துள்ளது. அதில் மிக முக்கியமானது 44ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி. இனி யாரும் இப்படி நடத்த முடியாது என்று சொல்லத்தக்க வகையில் மெச்சத்தக்க வகையில் மிகக் குறுகிய காலத்தில் வெகு சிறப்பாக நடத்தி முடித்துக் காட்டினோம்.

அதேபோல் இந்த இரண்டு ஆண்டுகளில், பன்னாட்டு மற்றும் தேசிய அளவில் பதக்கங்கள் வென்று இந்தியாவிற்கும் மற்றும் தமிழ்நாட்டிற்கும் பெருமை தேடித் தந்த தமிழ்நாட்டைச் சேர்ந்த 1,864 விளையாட்டு வீரர்களுக்கு மொத்தம் 52 கோடியே 82 லட்சம் ரூபாய் மதிப்பிலான உயரிய ஊக்கத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

**விளையாட்டு உள் கட்டமைப்பு வசதிகள் மேம்படுகிறது!**

'முதலமைச்சர் கோப்பை' என்ற பெயரில் பள்ளி, கல்லூரி மாணவர்கள், பொதுப் பிரிவினர், மாற்றுத்திறனாளிகள் மற்றும் அரசு ஊழியர்களுக்கு மாவட்டம் மற்றும் மாநில அளவில் சிலம்பம், கபடி, கால்பந்து, கூடைப்பந்து உள்ளிட்ட 15 வகையானப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்படுகின்றன. இதில், மாவட்ட மண்டல அளவில் இந்த ஆண்டு ஏறக்குறைய 3 லட்சத்து 71 ஆயிரம் வீரர்கள் பங்கேற்றனர். மண்டல அளவிலான போட்டிகளில் 27 ஆயிரத்து 54 வீரர் வீராங்கனைகள் பங்கெடுத்தார்கள். இந்த முதலமைச்சர் கோப்பை போட்டிகளை நடத்துவதற்கு 50 கோடியே 86 லட்சம் ரூபாயை ஒதுக்கீடு செய்தோம். இதில் பரிசுத் தொகை மட்டும் 28 கோடியே 30 லட்ச ரூபாய்!

மாநிலத்தில் விளையாட்டு மேம்பாட்டிற்காக பொதுமக்கள் மற்றும் கார்ப்பரேட் நிறுவனங்களுடன் இணைந்து 'Tamil Nadu Champions Foundation' என்கிற அறக்கட்டளை உருவாக்கப்பட்டுள்ளது. நிறுவனங்களும் இதர அமைப்புகளும் அளிக்கும் கூட்டாண்மைச் சமூகப்பொறுப்பு நிதிகளை ஒன்றுதிரட்டி இதனைச் செய்யலாம். இதன் மூலமாக நம் மாநிலத்தின் விளையாட்டு உள்கட்டமைப்பு வசதிகள் மேம்பட்டு வருகிறது.

கடந்த ஜூன் 13 முதல் ஜூன் 17 வரை ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வெற்றிகரமாக நடத்திக் காட்டினோம். இந்தப் போட்டியில் ஜப்பான், மலேசியா, ஹாங்காங், தென்னாப்பிரிக்கா, எகிப்து, ஆஸ்திரேலியா, கொலம்பியா மற்றும் இந்தியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த உலகின் முன்னணி ஸ்குவாஷ் வீரர்கள் கலந்து கொண்டனர்.

தேசிய அளவிலான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டி 2023 நமது மாநிலத்தில் நடைபெற உள்ளது. விளையாட்டு உள்கட்டமைப்பில் அரசு அதிநவீன கட்டமைப்புகளை உருவாக்கி வருகிறது. சென்னையில் விளையாட்டு நகரம் அமைக்கப்பட உள்ளது,

**ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படுகிறது!**

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச விளையாட்டுகளில் விளையாட்டு வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னை, மதுரை, திருச்சி மற்றும் நீலகிரியில் ஒலிம்பிக் அகாடமிகள் அமைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு ஊராட்சியிலும் உள்ள கிராமங்களில் விளையாட்டு அரங்கம் அமைக்கப்பட உள்ளது. சட்டமன்றத் தொகுதிகளில் சிறு விளையாட்ட ரங்கங்களை அரசு அமைத்துவருகிறது.

ஒருபுறம் துவக்க நிலையில் உள்ள விளையாட்டு வீரர்களையும், மறுபுறத்தில் விளையாட்டில் சிறந்து விளங்குபவர்களையும் ஊக்குவிக்க நமது அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கமளிப்பதைப் போலவே, விளையாட்டுமீதான ஆர்வத்தை அனைத்து மாணவ, மாணவியருக்கும் ஏற்படுத்த வேண்டும் என்று அமைச்சர் அவர்களையும், விளையாட்டுத் துறை அதிகாரிகளையும் நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

போட்டிகளில் கலந்து கொள்வது விளையாடுவது என்பது உடல் வலிமையும் உள்ள வலிமையும் தொடர்புடையது! படிக்கும் காலத்தில் மாணவ, மாணவியர் அனைவரும் ஏதாவது ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து அதில் பங்கெடுக்கும் வகையில் ஊக்கப்படுத்த வேண்டும்.

**அறிவை விரிவு செய் உடலை உறுதி செய்!**

'அறிவை விரிவு செய்' என்பதைப் போலவே, 'உடலை உறுதி செய்' என்பதும் நமது முன்னெடுப்பாக இருக்க வேண்டும். அறிவை விரிவு செய்ய பள்ளி கல்லூரி அளவில் ஏராளமான முன்னெடுப்புகளைச் செய்து வருகிறோம். அதேபோல் உடலை உறுதி செய்ய அதற்கான முன்னெடுப்புகளை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை செய்ய வேண்டும்.

ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் ஐந்தாவது இடத்தைப் பெற்றுள்ள தமிழ்நாடு, முதலிடத்துக்கு முன்னேற வேண்டும் என்றும் கேட்டு, அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### கடலூர் மாவட்ட சாலை விபத்தில்

# உயிரிழந்த கல்லூரி மாணவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் - நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, அக். 14 -

கடலூர் மாவட்ட சாலைவிபத்தில் உயிரிழந்த கல்லூரி மாணவரின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆறுதல் கூறி, நிதியுதவி அறிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் அவர்கள் நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பு வருமாறு:

கடலூர் மாவட்டம், தேவனாம் பட்டினம் கிராமம் கடற்கரை சாலையில் 11.10.2023 அன்று மதியம் அப்பகுதியிலுள்ள கலைக்கல்லூரி மாணவ, மாணவியர் கல்லூரி முடிந்து ஷேர் ஆட்டோவில் கடலூருக்கு வந்துகொண்டிருந்தபோது, எதிர்பாராதவிதமாக ஆட்டோ கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில் காயமடைந்த பண்ருட்டி வட்டம், சிறுவத்தூர் (அ), மணப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த தமிழ்ச் செல்வன், த/பெ.சரவணன் (வயது 20) என்ற மாணவர், கடலூர் அரசு தலைமை மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.

உயிரிழந்த கல்லூரி மாணவர் தமிழ்ச்செல்வன் அவர்களின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தின ருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள், தமது அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

---


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**பூங்கா (ம) விளையாட்டுதிடல் துறை**

கலைஞர் 100 1924 - 2023

பூ.து.ந.க.எண்.பி2/1959/2023

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

மேற்பார்வை பொறியாளர் (பூங்கா (ம) விளையாட்டுத்திடல் துறை) அவர்களால் கீழ்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

**"சிங்கார சென்னை 2.0"** திட்டத்தின் கீழ் மண்டலம்-5, 6, 7, 9, 10, 11, 13 மற்றும் 15 வரையில் உள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத்திடல்கள் அமைக்கும் பணிகள் (16 சிப்பங்கள்) **(Two Cover System)**

**குறைந்தபட்சம் ரூ.26.27 இலட்சம், அதிகபட்சம் ரூ. 177.23 இலட்சம்**

**முன்வைப்பு தொகை மொத்த பணியின் உத்தேச தொகையில் 1%**

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் : **02.11.2023** அன்று மாலை **3.00** மணி வரை

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் : **03.11.2023** அன்று மாலை **3.30** மணி

மேலும் விவரங்களுக்கு **www.tntendersgov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 5583 / ஒப்பந்தப்புள்ளி / 2023 **கண்காணிப்பு பொறியாளர் (பூ (ம) வி)**


---

### ஓமன் நாட்டு கடல் பகுதியில் மீன்பிடித்தபோது

# உயிரிழந்த குமரி மாவட்ட மீனவர் குடும்பத்திற்கு நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

*சென்னை, அக். 14 -*

*ஓமன் நாட்டுக் கடல் பகுதியில் மீன் பிடிக்கும்போது உயிரிழந்த கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கிட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*

*கன்னியாகுமரி மாவட்டம், கிள்ளியூர் தாலுகா, ஏழுதேசம் சின்னத்துறை மீனவ கிராமத்தைச் சேர்ந்த மீனவர் எல்.லெரின்ஷோ, த/பெ. கிளாரன்ஸ் என்பவர் 9.9.2023 அன்று ஓமன் நாட்டின் ஆழ்கடலில் மீன்பி டித்துக் கொண்டிருந்தபோது எதிர்பாராதவிதமாக படகிலிருந்து தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வேதனையடைந்தேன்.*

*உயிரிழந்த மீனவர் எல்.லெரின்ஷோ அவர்களின் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆறுதலையும், ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்வ தோடு, அவரது கு டு ம் ப த் தி ன ரு க் கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிட உத்தரவிட்டு ள்ளேன்.*

*இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.*

---

### தி.மு.க. வழக்கறிஞர் அணி

# வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், கோவை, நாமக்கல், திருப்பூர், ஈரோடு ஆகிய மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் - மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி., அறிவிப்பு!

தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர் மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, எம்.பி., தலைமையில், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் ஆலோசனைக் கூட்டம், நாளை (14.10.2023 - சனிக்கிழமை), காலை 11.00 மணியளவில் சேலம், மாமங்கம், மகேந்திரா கார் ஷோரூம் எதிரில் உள்ள "ஓட்டல் ராடிசனில்" நடைபெறும்.

இக்கூட்டத்தில் வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு ஆகிய மாவட்டங்களுக்குட்பட்ட தி.மு.க. வழக்கறிஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் - தலைவர் - துணைத் தலைவர் அனைவரும் தவறாது கலந்து கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

மாவட்ட தலைவர், துணைத் தலைவர், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளை மாவட்ட அமைப்பாளர் செய்திடுவதோடு, அவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்வதை உறுதி செய்திட வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள் - 12.10.2023

**என்.ஆர்.இளங்கோ எம்.பி.**
செயலாளர்
தி.மு.க. சட்டத்துறை

---

# என்றும் அண்ணாவின் அன்புத் தம்பி ஏ.வி.பி. ஆசைத்தம்பி !



**அ**றிஞர் அண்ணா அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகம் எனும் இந்த மாபெரும் இயக்கத்தைத் தொடங்கிய போது ஏ.வி.பி. ஆசைத்தம்பி அவர்கள், கழகத்தின் முன்னணி வீரர்களுள் முதலிடம் பெற்றுக் குறிப்பிடத் தக்கோராய் விளங்கியவர்களில் ஒருவராக அங்கீகாரம் பெற்றிருந்தவர். ஏ.வி.பி.ஆசைத்தம்பி உள்ளிட்டோர் இடம் வகித்திருந்த வண்ணமிகு வரிசையைப் பார்த்துத்தான் அண்ணா அவர்கள், " என் தம்பிகள் ஒரு குறையும் இல்லாத தங்கக் கம்பிகள்... ஆயிரம் ஆபத்துகள் அடுத்தடுத்து வந்தாலும் - அஞ்சி ஒதுங்காது அறப்போர் ஆற்றும் அடலேறுகள்! தீரர்கள்! தென்னாட்டை வாழ்விக்க வந்த பொன்னான வீரர்கள்!" என்று பலபடப் பாராட்டிச் சீராட்டி ஊக்கமும் உற்சாகமும் ஊட்டினார்.

"சமுதாயத் துறையிலே சீர்திருத்தம், பொருளாதாரத் துறையிலே சமதர்மக் குறிக்கோள்,அரசியல் துறையிலே வடநாட்டு ஏகாதிபத்தியத்தினின்றும் விடுதலை" என்று, கழகத்தின் கொள்கைக் கட்டமைப்பை வடிவமைத்து அண்ணா பிரகடனப் படுத்தினார். அதனை நெஞ்சார ஏற்றுக் கொண்டவர்கள், எதனையும் எதிர்பாராது கட்சிக்காக எந்நாளும் உழைப்பதற்கும், எந்தவிதத் தியாகத்திற்கும், தம்மைத் தயார் செய்து கொண்டவர்கள்.

**ஆழப் படர்ந்த வேர்களுடனும், வலுவான அடிமரத்துடனும், உரங் கொண்டு விளங்கும் விழுதுகளுடனும், கழகம் இன்றைக்கு, எழுந்தோங்கி நிற்கும் ஆலமரமாக - பல ஆலமரங்கள் வளர்ந்து நிறைந்து, இளந் தென்றலில் அசைந்தாடும் அழகிய தோப்பாகத் துலங்குகிறது. இப்படி ஒன்று பத்தாகவும், பத்து நூறாகவும் மேலும் மேலும் தொடர்ந்து பெருகுவதற்குப் பாடுபட்டவர்கள்,சிறைக் கொட்டடி ஏகியவர்கள், கண்ணீரும் செந்நீரும் சிந்தியவர்கள் ஏராளம், ஏராளம் ! அவர்களில் - அந்த வேர்களில் ஒருவர்தான், ஏ.வி.பி. ஆசைத்தம்பி!**

" தண்ணீர் விட்டோ வளர்த்தோம்" - கழகம் எனும் இப்பயிரைக்
"கண்ணீரால் காத்தோம்; எண்ணமெலாம் நெய்யாக
எம்முயிரின் உள்வளர்ந்த வண்ண விளக்கிது" என்ற மகாகவி பாரதியின் பைந்தமிழ் வரிகளைப் பயன்படுத்திச் சொல்வதற்கும், விரித்துரைப்பதற்கும், பொருத்தமும், பொருளும் மிக்கது நம் திராவிட முன்னேற்றக் கழகம்.கழகத்தை உயிராகவும், உணர்வாகவும் கொண்டு ஓம்பியோருள் ஒருவர்தான் ஏ.வி.பி.ஆசைத்தம்பி.

**"சித்திரச் சோலைகளே, உமை நன்கு திருத்தஇப் பாரினிலே**
**முன்னர் எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ**
**உங்கள் வேரினிலே!" என்ற பாவேந்தரின் பாட்டுத் தமிழில் விதந்தோதப்பட்டதற் கொப்பான பழம்பெரும் தோழர்களில் ஒருவர்தான் ஏ.வி.பி.ஆசைத்தம்பி!**

1924 -ஆம் ஆண்டில், விருதுநகரில், நீதிக் கட்சிக் குடும்பத்தில் பிறந்தார் ஆசைத்தம்பி - ஆம், அவரது தந்தையார் பழனியப்பன் நீதிக் கட்சியில் ஈடுபாடு உடையவராக இருந்த காரணத்தினாலே, ஆசைத்தம்பியும் மிக இளமைப் பருவத்திலேயே நீதிக்கட்சி, சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் கருத்துகளால் ஈர்க்கப்பட்டார். அப்படி ஈர்க்கப்பட்டவர், நீதிக்கட்சியின் கருத்துகளைப் பரப்புவதற்காக விருதுநகரில் 'இளைஞர் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கினார்.

1942- ஆம் ஆண்டு, அறிஞர் அண்ணா தலைமையில் நடைபெற்ற திராவிடத் தொண்டர் படை மாநாட்டில் பங்கேற்றார்.1944ல் விருதுநகரில் நடந்த திராவிட மாணவர் மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக - 1946ல் குடந்தையில் நடந்த சுயமரியாதை மாநாட்டின் தலைவராக - திராவிடர் கழகம் உருவானதற்குப் பின், விருதுநகர் நகரக் கழகச் செயலாளராக, இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளராக, மாநிலக் கழகச் செயற்குழு உறுப்பினராக - தென்தமிழ் நாட்டில் திராவிட இயக்கம் வேரூன்றிப் பரவிடப் பெரும்பணியாற்றினார்.1948ல் நடந்த திராவிடர் கழக மாநாடுகள் இரண்டிலும் திராவிட நாடு படத்திறப்பு உள்ளிட்ட முக்கிய பணிகள் வழங்கப்பட்டு, உரை நிகழ்த்தி இருக்கிறார்.

கழகம் தொடங்கியதும்,சிறப்பான பொறுப்புகளை ஏற்று நிறைவேற்றிய ஆசைத்தம்பி, 1949ல் அவர் எழுதிய ' காந்தியார் சாந்தி அடைய' என்ற 12 பக்க சிறு நூலுக்காக,1950ல் கைது செய்யப்பட்டு, கடுங்காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கப் பட்டதுடன், சிறை நிர்வாகத்தால் வலுக்கட்டாயமாக மொட்டையும் அடிக்கப்பட்டார். அது குறித்து அண்ணா அவர்கள், 'அகிம்சா ஆட்சியின் அழகினைப் பார்!' என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார்.

கழகத்தின் சார்பில் நகராட்சி, சட்டப் பேரவை, நாடாளுமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு வென்றார். 1957ல் சட்டப் பேரவையில் கழகத்தின் முதல் 15 உறுப்பினர்களில் ஆசைத்தம்பி ஒருவர். அண்ணா அவர்களுடன் சட்ட மன்றத்தில் அமர்ந்து பணி செய்த அரிய பெருமையும் ஆசைத்தம்பிக்கு உண்டு. இதழாசிரியராகவும், நூலாசிரியராகவும், கதை - கட்டுரை ஆசிரியராகவும்,திரைக் கதை எழுதுபவராகவும்,சிறந்த பேச்சாளராகவும் திகழ்ந்தவர் ஆசைத்தம்பி.

ஆசைத்தம்பி அவர்கள் எவ்வளவு ஆழமான சிந்தனையாளர் - தொலைநோக்குப் பார்வையாளர் என்பதற்கு ஒரே ஒரு எடுத்துக் காட்டு கூற வேண்டும் என்றால், 1977ல் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினராக அவர் ஆற்றிய உரைக் கருத்து ஒன்றைக் குறிப்பிடலாம்:

**"இந்தியாவின் நாடாளுமன்றத்தில் மத்திய அரசின் உள்துறை இலாகா, இந்தியாவில் பல மதங்கள் இருந்தும், இந்து ராஜ்ஜியத்தை உருவாக்க முயல்வதாக கோவிந்தன் நாயர் குற்றம் சாட்டினார். ஆனால், மத்திய அரசின் உள்துறை இலாகா, வெறும் இந்து ராஜ்ஜியத்தை மட்டுமல்ல - இந்திமொழி பேசும் இந்துக்களின் ராஜ்ஜியத்தை உருவாக்க முயலுகிறது என்று தி.மு.க.சார்பில் குற்றம் சாட்டுகிறேன்" என்று ஆசைத்தம்பி 1977ல் பேசியதின் உள்ளடக்கத்தை, இப்போது ஒன்றிய பா.ஜ.க. ஆட்சியில், இந்தி - இந்து மதம் - அகண்ட பாரதம் என்ற வெறியுணர்வு - வெறுப்பு அரசியல் வெளிப்பாடுகளின் மூலம் அறிந்து கொள்ளலாம்.**

**அதுமட்டுமல்லாமல், மற்றொரு சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றத்தில், "இன்று வட நாட்டில் ஒவ்வொரு மாநிலத்திலும் சாதிக் கலவரங்கள் நடைபெறுவதற்குக் காரணம், தமிழ்நாட்டில் பெரியார் அவர்கள் நடத்தியது போல் ஓர் இயக்கத்தைத் தொடங்காததுதான்.உங்களுடைய ஒவ்வொரு மாநிலத்திலும் பார்ப்பனர் அல்லாதார் கட்சியைத் தோற்றுவியுங்கள்" என்று, ஆசைத்தம்பி அவர்கள் ஆர்ப்பரித்தது, காலந்தோறும் பெரியாரின் தேவை எவ்வளவு முக்கியமானது என்பதைப் பறைசாற்றுகின்றது.**

திராவிட இயக்க ஆய்வாளர் திரு க.திருநாவுக்கரசு அவர்கள், 'திராவிட இயக்கத் தூண்கள்' என்ற தமது தொகுப்பில், ஆசைத்தம்பி அவர்கள், அரசியல் போக்கினை ஆழ்ந்து சிந்தித்துக் கணித்திடும் நுட்பத்தையும், தொலைநோக்குப் பார்வையையும் கொண்டவர் என்பதை அழகாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

**1950ல் காஞ்சியில் நடைபெற்ற மாவட்டக் கழக மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில் ஆசைத்தம்பி அவர்கள், "திராவிட இயக்கத்திற்குத் தைரியமிருந்தால் தேர்தலில் நிற்கட்டும் என்று சவால் விடுகிறார்கள்.அவர்களுக்குக் கூறுகிறேன்: தேர்தலில் நிற்கத் தயார்.ஆனால் ஒன்று சொல்ல ஆசைப்படுகிறேன்.சட்டசபையைத் திராவிட இயக்கம் கைப்பற்றி விட்டால், மறுதினமே,மத்திய சர்க்காரால் சட்டசபை கலைக்கப்படும்" என்று கணித்துச் சொன்னார். இரு முறை - 1976லும், 1991லும் - இரண்டு முறையும் கலைஞர் ஆட்சி காரணமே இல்லாமல் கலைக்கப்பட்டு - ஆசைத்தம்பி அவர்களின் தொலைநோக்கு நுட்பம் நிரூபணப்படுத்தப்பட்டிருக்கிறது.**

**கழகத்தில் அண்ணாவைப் பின்பற்றி அவரைப் போலவே அழகு தமிழில் உரை ஆற்றிட முயற்சித்தவர்கள், தத்துவ மேதை டி.கே.சீனிவாசன் அவர்களைப் போல 'அண்ணாவின் எதிரொலி' எனப் பெயரெடுத்தவர்கள், கலைஞரைப் போலவே பேசியவர்கள் உண்டு.ஆனால் தந்தை பெரியார் அவர்களைப் போலப் பேசிட யாரும் முயற்சித்ததாகத் தெரியவில்லை. ஆனால் ஆசைத்தம்பி ஒருவர்தான், பெரியார் பாணியில், கடைக் கோடி மனிதனும் புரிந்துகொண்டு சிந்தித்திடும் வண்ணம், எண்ணங்களைத் தொகுத்து வரிசைப்படுத்தி, இடம் - காலத்திற்கேற்றவாறு, எளிய முறையில் உரை நிகழ்த்துவதைக் கைவரப் பெற்றவர் என்பதால், அவரை அனைவரும் "வாலிபப் பெரியார்" என்றே அழைக்க முற்பட்டனர்.**

கழகத்தின் வைரத் தூணாக, கொள்கைக் குன்றமாக, "கொட்டியும் ஆம்பலும் நெய்தலும்" போல, இறுதிவரை கழகத்துடனேயே ஒட்டி உறவாடி, நம் நினைவிலே நிரந்தரமாக நிலைத்திருக்கிறார் ஏ.வி.பி.ஆசைத்தம்பி! அவருக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள், கழகம் கடந்து வந்த பாதையைத் திரும்பிப் பார்த்து, இலட்சியப் பயணத்தைத் தொடருவது, **'திரும்பிப் பார், முன்னேறு'** என்ற கருத்தியலுக்கு, பொருத்தமான வகையிலே பொருள் கூட்டுவதாகும் !

**: கி.இராஜமாணிக்கம் :**

* * *

## முதலமைச்சரின் கனவுத் திட்டம்! கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட முறையில்

# மேல் முறையீட்டு மனுக்களை சீரிய முறையில் ஆய்வு செய்வீர்!

### மேல் முறையீட்டு திட்ட நடைமுறைகள் குறித்து அதிகாரிகளுக்கான பயிற்சியைத் தொடங்கி வைத்து அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, அக். 14 -**

**முதலமைச்சரின் கனவுத் திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். அத்திட்டத்தின் மூலம் உரிமைத் தொகை கிடைக்காதவர்களின் மேல் முறையீட்டு மனுக்களை சீரிய முறையில் ஆய்வு செய்து கவனத்துடன் செயல்படவேண்டும் என்று விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.**

சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட மேல்முறையீட்டு விண்ணப்பங்களைப் பரிசீலிப்பது தொடர்பாக, துணை ஆட்சியர்கள் - சார் ஆட்சியர்கள் வருவாய் கோட்ட அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் நேற்று முன்தினம் காலையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்ட அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் இன்றைக்கு தமிழ்நாட்டில் மட்டுமல்ல இந்திய ஒன்றிய அளவில் மிகப்பெரிய பாராட்டைப் பெற்றுள்ளது. கர்நாடகம், தெலங்கானா உள்ளிட்ட பிற மாநிலங்களாலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பித்த ஒரு கோடியே 63 இலட்சம் பேரில் 1 கோடியே 6 இலட்சத்து 52 ஆயிரத்து 198 மகளிருக்கு உங்களால் உரிமைத்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணியை மிகச் சிறப்பாகச் செய்து முடித்ததில் துணை ஆட்சியர்கள், சார் ஆட்சியர்களுடைய வருவாய் கோட்ட அலுவலர்களாகிய உங்கள் பங்களிப்பு மிக மிக முக்கியமானது. அதற்கு இந்த நேரத்தில் அரசின் சார்பாக, எங்கள் துறையின் சார்பாக உங்கள் அத்தனை பேருக்கும் எங்களின் நன்றியையும், பாராட்டுகளையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிகக் குறுகிய காலத்தில் இந்தத் திட்டத்திற்கான பணிகள் தொடங்கப்பட்டு நிறைவு பெற்றன. இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பங்களை வீட்டிற்கே சென்று வழங்க வேண்டும் என்று கூறியிருந்தோம். அதை மிகச் சிறப்பாகச் செய்து முடித்துள்ளீர்கள்.

இதையடுத்து 34 ஆயிரம் முகாம்கள், தமிழ்நாடு முழுக்க நடத்தப்பட்டு அவற்றின் மூலம் விண்ணப்பப் பதிவுகள் பெறப்பட்டன.

அதன் பிறகு கள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டனர். இன்றைக்கு கிட்டத்தட்ட 65 இலட்சம் விண்ணப்பங்கள் ஏற்கப்படவில்லை. இது குறித்து 9 இலட்சத்து 70 ஆயிரம் பேர் இது வரை மேல்முறையீடு செய்துள்ளார்கள்.

இந்த மனுக்களை ஆய்வுசெய்து தகுதியானவர்களுக்கு, கலைஞர் உரிமைத் தொகைத் திட்டப் பயனாளிகளுக்குப் பயனைக் கொண்டு சேர்ப்பதற்கான நோடல் ஆபிசர்களாக நீங்கள் செயல்பட உள்ளீர்கள்.

இந்த 9 இலட்சத்து 70 ஆயிரம் மகளிரில் தகுதியுள்ள ஒரு மகளிர்கூட விடு பட்டுவிடக்கூடாது என்ற எண்ணத்துடன், நீங்கள் ஒவ்வொருவரும் செயல்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

விண்ணப்பம் ஏற்கப்படாதவர்களிடம் அதற்கான காரணங்கள் என்னென்ன என்பது குறித்து, நாம் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளோம். எனினும், இத்தனை இலட்சம் மகளிர் மேல்முறையீடு செய்துள்ளனர். எனவே, இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து, நீங்கள் செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



இந்தத் திட்டமானது முதலமைச்சர் அவர்களுடைய கனவுத் திட்டம். தமிழ்நாட்டு மகளிரைக் கைத்தூக்கி விடுகின்ற திட்டம். மகளிருக்கு சுதந்திரத்தையும், உரிமையையும் அளிக்கின்ற உன்னதமான திட்டம். எனவே, மேல் முறையீட்டு மனுக்களைச் சீரிய முறையில் ஆய்வுச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

நீங்கள் பெறுகின்ற மேல் முறையீட்டு மனுக்களை 30 தினங்களுக்குள் தேர்வு செய்வதற்கான வழிகாட்டுதல், இங்கே உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. காலை முதல், இந்த மாபெரும் திட்டத்தின் தகுதியான பயனாளிகளைக் கண்டறிவதற்கான பல்வேறு தகவல் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. திட்ட விதிமுறைகளின்படி மனுக்கள் ஏற்றப்படாத பயனாளிகள் தங்களது குறைகளை உங்களிடம் மேல்முறையீடாக அளித்துள்ளார்கள். அவர்களின் மேல் முறையீடுகளை மிகவும் கவனத்துடன் பரிசீலனை செய்து தீர்வு காண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேல்முறையீடுகளைத் தீர்வு செய்வதற்கு இந்தப் பயிற்சி முகாமில் விரிவான வழிகாட்டுதல்கள் வழங்கப்பட்டுள்ளன. இங்கு வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதலைகளை முழுமையாக கவனித்து, ஒவ்வொரு பயனாளியின் விண்ணப்பத்தை வும் ஆய்வு செய்து மேல்முறையீட்டு அலுவலரின் பரிந்துரைகளை, இணையதளத்தில் பதிவு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

இதுமட்டுமின்றி, பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் சுமார் 7 இலட்சம் விண்ணப்பதார்கள் குறித்துப் போதிய தரவுகள் இல்லாததால், இவை பரிசீலனையில் இப்போது உள்ளன. இந்த விண்ணப்பங்கள், தற்போது கள ஆய்விற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

கள ஆய்வு முடிந்த பிறகு, இதில் உள்ள தகுதியான பயனாளிகளுக்கு உரிமைத்தொகை வழங்கப்படும். மேல்முறையீடு மற்றும் கள ஆய்வு மனுக்களுக்கான பரிசீலனை முடிவுற்ற பிறகு விண்ணப்பிக்கா மல் விட்டவ ர்கள் மற்றும் புதியதாக விண்ணப்பிக்க விரும்பும் மகளிர் இணையதளம் மூலம் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு, அரசால் தனியாக ஏற்படுத்தித் தரப்படும்.

தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் இந்த மாபெரும் திட்டத்தில் 1 கோடி பயனாளிகளுக்குப் பலன்கள் கிடைத்து, மகிழ்ச்சியுடன் இருக்கும் வேளையில் இந்த உரிமைத் தொகை பெறாத விண்ணப்பத்தா ரர்கள் மனக்குறைகள் உரிய கவனத்துடன் கேட்டுத் தீர்த்து வைப்பது நாம் அனைவருடைய கடமையாகும்.

நான் இரண்டு நாட்களுக்கு முன்பு சட்ட பேரவையில் பேசியதுபோல, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, கலைஞர் மகளிர் உரிமைத்திட்டம் குறித்த எல்லாத் தகவல்களையும் நாம் வழங்கவேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் உங்களிடத்தில் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு முன்னுரிமை கொடுத்து மற்றும் ஒழுங்கான பதிலை நீங்கள் தரவேண்டும். ஒரு திருப்திகரமான பதிலைத் தரவேண்டும்.

சட்டமன்றத்திலேயே நான் சொல்லியிருக்கிறேன் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர்களுடைய உரிமை, கடமை இந்த மகளிர் உரிமைத் தொகையைத் தகுதியானவர்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன்.

எனவே, மக்கள் பிரதிநிதிகள், அவர்கள் கொடுக்கும் மனுக்களுக்கு முன்னுரிமை தர வேண்டும். அவர்களுக்கு திருப்திகரமான பதிலைத் தரவேண்டும்.

இந்தப் பணியினை நீங்கள் முழுக்க முழுக்க வெளிப்படைத் தன்மையுடன் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தத் திட்டத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்து அதிகாரிகள் முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் வரை இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட நீங்கள்தான் வழிவகைச் செய்ய வேண்டும். இந்தத் திட்டம் தொடர்பாக, உங்களுக்கு என்ன சந்தேகம் இருந்தாலும், மாவட்ட ஆட்சியர் அல்லது நம்முடைய சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை செயலாளரைத் தொடர்புகொண்டு உங்கள் சந்தேகங்களை நீங்கள் தெளிவுப்படுத்திக் கொள்ளலாம்.

எனவே, பணியின் முக்கித்துவத்தைப் புரிந்துகொண்டு கவனத்துடன் செயல்படுமாறு மீண்டும், மீண்டும் உங்களையெல்லாம் நான் அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

---

### திருச்சி - காரைக்குடி நெடுஞ்சாலை மற்றும்

# வடுகபட்டி-எல்.ஐ.சி.யில் ரவுண்டானா அமைக்கப்படுமா?

### பேரவையில் இனிகோ இருதயராஜ் கேள்வி!

**சென்னை, அக்.14-**

**திருச்சி - காரைக்குடி நெடுஞ்சாலை மற்றும் வடுகபட்டி- எல்.ஐ.சி. சந்திக்கும் இடத்தில் ரவுண்டானா அமைக்கப்படுமா? என்று பேரவையில் த.இனிகோ இருதயராஜ் கேள்வி எழுப்பினார்.**

**இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:**

**த.இனிகோ இருதயராஜ்:** திருச்சிராப்பள்ளி கிழக்கு தொகுதிக்குட்பட்ட திருச்சிராப்பள்ளி காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை மற்றும் வடுகப் பட்டி எல்.ஐ.சி. காலனி சாலை சந்திக்கும் இடத்தில் ரவுண்டானா அமைக்க அரசு முன்வருமா?

**அமைச்சர் எ.வ.வேலு:** திருச்சி புறவழிச்சாலை என்பது தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்குச் சொந்தமான சாலையாகும். அதில், கி.மீ. 131/100கீழே ரவுண்டானா ஒன்று அமைக்க வேண்டுமென்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். தற்போதைய போக்குவரத்து செறிவின்படி ரவுண்டானா அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிகக் குறைவாக இருக்கின்றன. இருப்பினும் திருச்சியினுடைய புறவழிச் சாலைப் பணிகள் 99 சதவீதம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது முழுமையடைந்த பின்னர்தான், அந்தச் சாலையை பயன்பாட்டிற்கு கொண்டுவர முடியும். அவ்வாறு பயன்பாட்டிற்கு கொண்டுவருகிறபொழுது, போக்குவரத்தினுடைய செறிவு அதிகமாகும். போக்குவரத்துச் செறிவு அதிகமாகும் என்பதால், இந்த roundana கட்டுவதை ஒரு ஆய்வு செய்து, போக்குவரத்துச் செறிவின் அடிப்படையிலேயே roundana அமைப்பதற்கு இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் அமைப்பதாக எனக்கு தெரிவித்திருக்கிறார்கள். எனவே, போக்குவரத்துச் செறிவினைப் பொறுத்து தான் roundana கட்டுவது குறித்த முடிவு செய்யப்படும்.

**த.இனிகோ இருதயராஜ்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி, கிழக்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கே. சாத்தனூர், வடுகப்பட்டி பகுதிகளிலே சுமார் 2 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இப்பகுதிகளிலிருந்து 2 கிலோ மீட்டர் தூரத்தில், பஞ்சப்பூர் பகுதியில் தமிழக முதல்வர் அவர்கள் திருச்சிக்கு 349 கோடி ரூபாய் ஒதுக்கி பிரம்மாண்ட மான புதிய மத்திய பேருந்து நிலையம் அமைத்துத் தந்துள்ளார்கள். இப்பகுதி வளர்ந்து வருகிற பகுதி.

திருச்சி, காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை என்பது NHAI-க்கு சொந்தமானதாக இருக்கிறது. அவர்களுக்கு அந்த roundana அமைப்பதற்கான இடமும் அந்தப் பகுதியிலே NHAIக்கு சொந்தமாகவே உள்ளது. எனவே, தாங்கள் அன்றாடப் பணிகளை மேற்கொள்ள கே.சாத்தனூர், LIC காலனி, வடுகப்பட்டி இந்தப் பகுதியிலே இருக்கக் கூடிய மக்கள் திருச்சி, காரைக்குடி தேசிய நெடுஞ்சாலை யைத்தான் கடந்து செல்ல வேண்டி இருக்கின்ற காரணத்தினால், அங்கு அடிக்கடி accidents நடக்கின்றன. இப்போதுதான் நாங்கள் அங்கு வேகத்தடையும், light-ம் போட்டு ஓரளவிற்கு accidents வராமல் தடுத்திருக்கிறோம். NHAI அதிகாரிகளைக் கேட்டால், பொதுப் பணித் துறை



அமைச்சர் அவர்கள் பரிந்துரை செய்தால் நிச்சயமாக பரிசீலிக்கப்படும் என்று சொல்லி உள்ளார்கள். நானும் அமைச்சர் அவர்களுக்கு கடிதம் கொடுத்திருக்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து, அப்பகுதி மக்கள் சாலையைக் கடக்க ஏதுவாக roundana அமைத்து, அப்பகுதி மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றித்தர வேண்டுமென்று தங்களின் வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் கொடுத்த கடிதத்தின் அடிப்படையிலேதான், சம்பந்தப்பட்ட நெடுஞ்சாலைத் துறையினுடைய மண்டல அதிகாரியை அழைத்துப் பேசிய அடிப்படையிலேதான், நான் கூறிய இந்த விவரங்களை எனக்கு கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புறவழிச் சாலை முழுமையடைந்தவுடனேயே, அந்தப் போக்குவரத்துச் செறிவைப் பொறுத்து இந்த roundana அமைக்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் சொன்னதன் அடிப்படையிலே, நெடுஞ்சாலைத் துறையினுடைய மண்டல அதிகாரி அவர்களுக்கு அழுத்தம் கொடுக்கிற அளவிற்கு நான் அவர்களிடம் மீண்டும் கடிதத் தொடர்பு கொள்வேன் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**த.இனிகோ இருதயராஜ்:** பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோலவே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட மேலசிந்தாமணி, பழைய கரூர் ரோட்டில், சிதம்பரம் மஹால் அருகிலுள்ள ஒரு கார் மட்டுமே செல்லக்கூடிய ஒரு குறுகிய பாலமானது சுமார் 100 ஆண்டுகள் பழமை வாய்ந்த வாய்க்கால் பாலம் ஆகும்.

அந்தப் பாலத்தை அகலப்படுத்தி சிந்தாமணிப் பகுதியிலே ஏற்படுகின்ற போக்குவரத்து நெரிசலை சீர்செய்ய வேண்டுமென்று சட்டமன்றத்திலே கோரிக்கை வைத்தேன். அமைச்சர் அவர்களும் நிறைவேற்றித் தருவ தாக பதில் கூறினார்கள். கடிதமும் எழுதியிருந்தேன். எனவே, எப்போது அந்தப் பாலம் கட்டப்பட்டு பழைய கரூர் ரோட்டிலே உள்ள அந்த ஆக்கிரமிப்புகள் எல்லாம் அகற்றப்பட்டு அகலமான பாதை கிடைக்குமென்பதை தங்களின் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**அமைச்சர் எ.வ.வேலு:** நகராட்சி மேலாண்மைத் துறையினுடைய அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இது சம்பந்தமாக என்னிடத்தில் சொல்லியிருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட கண்காணிப்பு பொறியாளரிடம் இதைத் தெரிவித்து, இதற்கு முழுமையான ஒரு திட்ட அறிக்கை தேவை என்று சொல்லியிருக்கிறேன். அந்தப் பணியிலே ஈடுபட்டிருக்கிறார்கள். அது முழுமையடைந்தால், அடுத்த நிதியாண்டிலே முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியோடு, இந்தப் பணியைச் சேர்ப்பதற்கு எங்கள் துறையின் சார்பாக ஏற்பாடு செய்வோம்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

---

### உதகை நகராட்சி மார்க்கெட் - குன்னூர் பேருந்து நிலைய விரிவாக்கம் உள்ளிட்ட

# நீலகிரி மாவட்ட அனைத்துத் துறைகளின் வளர்ச்சித் திட்டப்பணிகள்!

### அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு!

**நீலகிரி, அக்.14-**

**நீலகிரி மாவட்டத்தில் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவரும் மற்றும் நடைபெறவுள்ள வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து, அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது.**

நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவரும் மற்றும் நடைபெறவுள்ள வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து, அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் (12.10.2023) நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா முன்னிலை வகித்தார்.

இக்கூட்டத்தில், சுற்றுலாத்துறை அமைச்சர், தற்காலிகமாக கட்டப்பட்டு வரும் உதகை நகராட்சி மார்க்கெட் கடைகளின் தற்போதைய நிலை குறித்தும், குன்னூர் பேருந்து நிலைய விரிவாக்க பணிகள் குறித்தும், குன்னூர் வாகன நிறுத்துமிடம் அமைக்க இடம் தேர்வு செய்தல் தொடர்பாகவும் உள்ளிட்ட பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகள் குறித்து துறை அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது -முதலமைச்சர் அவர்கள் பல்வேறு துறைகளின் மூலம் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாவட்டங்களில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் நடைபெறவுள்ள வளர்ச்சித் திட்ட பணிகளை தொடர்ந்து கண்காணிக்க அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் ஒவ்வொரு துறையின் வாயிலாக நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்தும், நடைபெறவுள்ள வளர்ச்சித்திட்டப்பணிகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்று நமது மாவட்டத்தில் உதகை நகராட்சி மார்க்கெட் கடைகள் அமைக்கும் பணிகள் விரைவில் மேற்கொண்டு, அதனை சம்பந்தப்பட்ட வியாபாரிகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

மேலும், மாவட்டத்தில் நடைபெறும் அனைத்து பணிகள் தரமான முறையில் மேற்கொள்ளப்படுகிறதா என்பதனை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கள ஆய்வு மேற்கொள்ள வேண்டும். நடைபெற்று வரும் வளர்ச்சித்திட்டப்பணி களை விரைவாக முடித்து, பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கா.ராமச்சந்திரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் திருமதி.தனப்பிரியா (பொது), மணிகண்டன் (வளர்ச்சி), உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) சாம்சாந்தகுமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டாட்சியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

## மகளிர் உரிமை மாநாடு

### வெளி மாவட்ட மகளிர் தங்குவதற்கான இடங்கள்!

"மகளிர் உரிமை மாநாடு" இன்று (14.10.2023) சனிக்கிழமை மாலை 4 மணி அளவில் சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் தமிழ்நாடு முதலமைச்சர் தி.மு.கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாட்டிற்கு வருகை தரும் வெளிமாவட்ட மகளிர் பயன்பாட்டிற்காக ஏற்பாடு செய்யப்பட்டு திருமண மண்டபங்களின் பட்டியல்-

1. கே.ஆர்.ஜி. திருமண மண்டபம், சிங்கபெருமாள்கோவில்.
   தொடர்பு எண் - 9443555338 (பி.சந்தானம், ஒன்றியச்செயலாளர்)
2. ஜி.அர்.கே.திருமண மண்டபம், கூடுவாஞ்சேரி.
   தொடர்பு எண் -9962233322 (எம்.கே.டி.கார்த்தி,நகரச்செயலாளர்)
3. ஆழ்வார் திருமண மண்டபம், மறைமலைநகர்.
   தொடர்பு எண்-9442605166 (ஜெ.சண்முகம், நகரச் செயலாளர்).
4. பி.ஆர்.என்.திருமண மண்டபம்.
   தொடர்பு எண்-9566333339 (வி.எஸ்.ஆராமுதன்-ஒன்றியச் செயலாளர்)

மாநாட்டிற்கு வருகை தரும் மகளிர் பயன்படுத்திக்கொள்ள கேட்டுக்கொள்கிறோம்.

**ஜெ.ஹெலன் டேவிட்சன்**
(மாநில மகளிரணிச் செயலாளர்)

**நாமக்கல் .ப.இராணி**
(மாநில மகளிர் தொண்டரணிச் செயலாளர்)



நீலகிரி மாவட்டம், உதகை தமிழகம் அரசு விருந்தினர் மாளிகையில், நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி பகுதிகளில் நடைபெற்று வரும் மற்றும் நடைபெற உள்ள வளர்ச்சி திட்டப்பணிகள் குறித்து, அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில். நேற்று முன்தினம் (12.10.2023) நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.உமா மகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திருமதி.தனப்பிரியா உட்பட பலர் உள்ளனர்.



தாராபுரம் ஒன்றியம், அம்மாபட்டி ஊராட்சியை சார்ந்த 140 நரிக்குறவர் இன மக்களுக்கு ரூ.64.70 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவி வீட்டுமனைப்பட்டா சாதிச்சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட வருவாய் அலுவலர் த.ப.ஜெய்பீம், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத்தலைவர், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.வி.செந்தில்குமார், தாராபுரம் நகர்மன்றத்தலைவர், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கு.பாப்புக்கண்ணன், தாராபுரம் நகரக் கழக செயலாளர், நகர்மன்ற உறுப்பினர் எஸ்.முருகானந்தம் உள்பட நகரமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

# WOMEN'S RIGHTS CONFERENCE

DATE:14.10.2023 SATURDAY 4:30 PM
VENUE: YMCA GROUND, NANDANAM,CHENNAI-6000 15.





KALAIGNAR 100
1924 - 2023



PRESIDED BY

## THALAPATHI M.K.STALIN

CHIEF MINISTER OF TAMILNADU & PRESIDENT OF DMK

CONFERENCE ADDRESS

## ANNAI SONIA GANDHI MP

FORMER PRESIDENT OF INC

Santhosh Design 9940180492

SPECIAL ADDRESS

**MS.MEHBOOBA MUFTI**
FORMER CHIEF MENISTER OF JAMMU & KASHMIR
CHAIRPERSON, PDP

**MS.PRIYANKA GANDHI VADRA**
GENERAL SECRETARY,INC

**MS.SUPRIYA SULE MP**
WORKING PRESIDENT, NCP

**MS.DIMPLE YADAV MP**
SAMAJWADI PARTY

**MS.SUBHASHINI ALI**
FORMER MP & POLITBURO MEMBER, CP(M)

**MS.ANNIE RAJA**
NATIONAL EXECUTIVE COMMITTEE MEMBER, CPI &
GENERAL SECRETARY, NFIW

**MS.LESHI SINGH**
MINISTER FOR FOOD AND CONSUMER PROTECTION,
GOVT OF BIHAR & NATIONAL EXECUTIVE COMMITTEE MEMBER, JD(U)

**MS.RAKHI BIDLAN**
DEPUTY SPEAKER OF DELHI ASSEMBLY &
NATIONAL EXECUTIVE MEMBER, AAP

**MS.SUSHMITA DEV**
FORMER MP & NATIONAL SPOKESPERSON, AITC

WELCOME ADDRESS
**MS.HELEN DAVIDSON**
FORMER MP & SECRETARY, DMK WOMEN'S WING

EVENT CHAIR
**MS.KANIMOZHI KARUNANIDHI MP**
DEPUTY GENERAL SECRETARY,DMK

VOTE OF THANKS
**MS.NAMAKKAL RANI**
SECRETARY, DMK WOMEN'S CADRE'S WING

## CHENNAI SOUTH DISTRICT DMK


கலைஞர் 100
1924 - 2023
மகளிர் உரிமை மாநாடு
தி.மு.க. மகளிர் அணி
நாள்: 14.10.2023
நேரம்: மாலை 4:30 மணி
இடம்: ஒய்.எம்.சி.ஏ. திடல், நந்தனம், சென்னை
மகளிர் உரிமைகளைக் காக்க, ஜனநாயகம் காக்க,
நம் 'இந்தியா'வை மீட்டெடுக்க வாருங்கள்!



நாள்: 14.10.2023
சனிக்கிழமை
நேரம்:
மாலை 6.00 மணி
இடம்:
YMCA மைதானம்
நந்தனம், சென்னை – 35
தமிழினத்தின் தனிப்பெரும்
தலைவர் கலைஞர்
அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற உள்ள
மகளிர் உரிமை மாநாடு
தலைமை ஏற்க உள்ள
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
கழகத் தலைவர்
அவர்களையும்
விழாவினை சிறப்பிக்க உள்ள
இந்திராவின் மருமகளே வருக என தலைவர் கலைஞரால்
வரவேற்கப்பட்ட – அன்னை
சோனியா காந்தி
அவர்களையும்
இந்தியா கூட்டணியின்
பிற தேசிய தலைவர்களையும்
வருக! வருக!! அன்புடன் வரவேற்கும்
அன்புடன் வரவேற்று மகிழும்: பி.கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் – மகளிர் உரிமை துறை அமைச்சர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்
தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க



தி.மு.க. மகளிர் அணி சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர்
அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

"I.N.D.I.A."
கூட்டணி கட்சிகளின்
மகளிர் தலைவர்கள் பங்கேற்கும்

கலைஞர் 100
1924 - 2023




தி.மு.க. மகளிர் அணி

# மகளிர் உரிமை மாநாடு

நாள்: 14-10-2023
சனிக்கிழமை, மாலை 5 மணி
இடம்: ஒய்.எம்.சி.ஏ.திடல்,
நந்தனம், சென்னை

*தலைமையேற்று எழுச்சியுரையாற்ற வருகை தரும்*

நாடும் நமதே! நாற்பதும் நமதே! என்று வெற்றி முழக்கமிடும்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் - பெண்ணுரிமைக் காவலர்

# கழகத் தலைவர்

*அவர்களே வருக.. வருக...*

*விழாவில் பங்கேற்று சிறப்புரையாற்ற வருகை தரும்*

## திருமிகு. சோனியா காந்தி
## திருமிகு. பிரியங்கா காந்தி

ஆகியோரையும் மற்றும் கூட்டணி கட்சிகளின் மகளிர் தலைவர்கள்
அனைவரையும் வருக.. வருக... என அன்புடன் வரவேற்கிறோம்...

*அன்புடன்...* **என்.கயல்விழி செல்வராஜ்**

கழக மகளிர் அணி துணைச் செயலாளர் / ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர்



நாகை மாவட்ட தி.மு.க. ஆதிதிராவிடர் நலக்குழு மற்றும் மாவட்ட சிறுபான்மை நல உரிமைப்பிரிவு சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சமூகநீதி மற்றும் மதச்சார்பின்மை கோட்பாடுகள் குறித்த பிரச்சார பொதுக்கூட்டம் திட்டச்சேரி பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் பேசினார். உடன் திருமருகல் வடக்கு ஒன்றியச் செயலாளர் செல்வ.செங்குட்டுவன், திட்டச்சேரி பேரூர் கழகச் செயலாளர் எம்.முகமதுசுல்தான், பொதுக்குழு உறுப்பினர் என்.பன்னீர்செல்வம், ஆதிதிராவிடர் நலக்குழு மாவட்ட அமைப்பாளர் பெ.முருகானந்தம், சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு மாவட்ட அமைப்பாளர் கே.எஸ்.சாகுல்ஹமீதுராஜா மற்றும் பலர் உள்ளனர்.

### மேட்டுப்பாளையத்தில் ரூ.1120.57 கோடி மதிப்பீட்டில்

# திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டுக்குடிநீர் திட்ட நீரேற்று நிலையத்தின் பணிகள்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

திருப்பூர், அக். 14 - மேட்டுப்பாளையத்தில் ரூ.1120.57 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டுக்குடிநீர் திட்ட நீரேற்று நிலைத்தின் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ் தலைமையில், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், மாநகராட்சி ஆணையாளர் பவன்குமார் ஜி. கிரியப்பனர் ஆகியோர் முன்னிலையில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையத்தில் ரூ.1120.57 கோடி மதிப்பீட்டில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டுகுடிநீர் திட்ட நீரேற்று நிலைத்தின் பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அமைச்சர் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. இன்றைய தினம், மேட்டுப்பாளையத்தில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காவது கூட்டு குடிநீர் திட்ட நீரேற்று நிலைத்தினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. திருப்பூர் மாநகராட்சியில் புதிய குடிநீர் ரூ.1120.57 கோடி மதிப்பீட்டில் 6 சிப்பங்களாக பிரிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1 எண்ணிக்கையில் நீரேற்று நிலையமும் 1 எண்ணிக்கையில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையமும், 144.208 கி.மீ நீளத்தில் குடிநீர் ஈர்ப்பு குழாய்களும் பதிக்கப்பட்டுள்ளது. மொத்தம் 29 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள், அதில் 21 எண்ணிக்கைகள் பணி முடிவுற்று நீரேற்றம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 08 எண்ணிக்கைகள் பல்வேறு நிலைகளில் பணி நடைபெற்று வருகிறது. குடிநீர் விநியோக குழாய் 1142.069 கி.மீ சப்ளை செய்யப்பட்டு அதில் 1040.377 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. வீட்டு இணைப்புகள் (HSC) மொத்தம் எண்ணிக்கைகள் 67,000 அதில் 63,727 எண்ணிக்கைகள் முடிவுற்றது. DMA Zonation (24X7) குடிநீர் விநியோக குழாய் 57 கி.மீ சப்ளை செய்யப்பட்டு அதில் 11.54 கி.மீ பதிக்கப்பட்டுள்ளது. தற்போது 06.01.2023 முதல் 07.10.2023 வரை 12,576.95 ML (தினசரி சராசரி 60 முதல் 75 MLD) குடிநீர் சுத்திகரிப்பு செய்யப்பட்டு மொத்தமுள்ள 70 மேல்நிலை தொட்டிகளில் 51 மேல்நிலை தொட்டிகளில் நீரேற்றம் செய்யப்பட்டு சோதனை ஓட்டம் நடைபெற்று வருகிறது. இது வரை 95% பணிகள் முடிவுற்றது. வரும் டிசம்பர் 2023 க்குள் பணிகள் முடித்து பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் விரைவாக பணிகள் நடைபெற்று வருகிறது. இத்திட்டம் முடிவுறும் தருவாயில் தனிநபர் ஒன்றுக்கு 135 லிட்டர் குடிநீர் வழங்கப்படும். இக்குடிநீர் திட்டம் 30 ஆண்டு காலத்திற்கு பயன்பெரும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் தெரிவித்தார்.

தொடர்ந்து, அன்னூர் வட்டம், ஒட்டர்பாளையத்தில் திருப்பூர் மாநகராட்சியின் நான்காம் கூட்டு குடிநீர் திட்ட நீர்சுத்திகரிப்பு நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக நீர்பாசனத் துறையின் சார்பில் பவானிசாகர் வடிநிலக்கோட்டம், ஒடந்துறை கிராமத்தில் பாவணி ஆற்றின் குறுக்கே ரூ.24.54 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணியை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் ரா.பாலசுப்பரமணியன், மாநகராட்சி செயற்பொறியாளர் கண்ணன், இளநிலைப் பொறியாளர் கோவிந்த பிரபாகர், நீர்பாசனத்துறை செயற்பொறியாளர் அருள் அழகன், உதவி செயற்பொறியாளர் சுப்பரமணி, உதவி பொறியாளர் ரமேஷ் மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் - அரியலூர் மாவட்டங்களுக்கு

# ஒன்றிய,நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் – குன்னம் சி.இராஜேந்திரன் அறிக்கை!





பெரம்பலூர், அக்.14 - பெரம்பலூர், அரியலூர் மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் நடைபெறுவது குறித்து, அரியலூர் மாவட்டச் செயலாளரும், போக்குவரத்துத் துறை அமைச்சருமான சா.சி.சிவசங்கர் ,பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன் ஆகிய இருவரும் அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கை வருமாறு:-

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள, பெரம்பலூர் நகரம், பெரம்பலூர், ஆலத்தூர் கிழக்கு, ஆலத்தூர் மேற்கு, வேப்பந்தட்டை கிழக்கு, வேப்பந்தட்டை மேற்கு, வேப்பூர் வடக்கு, வேப்பூர் தெற்கு ஆகிய ஒன்றியங்கள், குரும்பலூர், அரும்பாவூர், பூலாம்பாடி, லெப்பைக்குடிக்காடு ஆகிய பேரூர், அரியலூர் மாவட்டத்தில் உள்ள,

அரியலூர் வடக்கு தெற்கு ஜெயங்கொண்டம் வடக்கு தெற்கு, திருமானூர் கிழக்கு மேற்கு,ஆண்டிமடம் வடக்கு தெற்கு, செந்துறை வடக்கு தெற்கு, தா.பழூர் கிழக்கு மேற்கு ஆகிய ஒன்றியங்கள், அரியலூர் நகரம், ஜெயங்கொண்டம் நகரம்,

உடையார்பாளையம் பேரூராட்சி, வரதராஜன் பேட்டை பேரூராட்சி ஆகிய பகுதிகளுக்கு இளைஞர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளது. இதற்கான நேர்காணல் வருகிற 17.10.2023,(செவ்வாய்க்கிழமை), மதியம் 2.00 மணிக்கு , பெரம்பலூர் மாவட்டத்திற்கும், மாலை 4.00 மணிக்கு அரியலூர் மாவட்டத்திற்கும் பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நேர்காணல் நடைபெறுகிறது.

இதில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் பி.எஸ்.சீனிவாசன்,

எஸ்.ஜோயல், இன்பா, ஏ.என்.ரகு, நா.இளையராஜா, ப.அப்துல்மாலிக், கே.இ.பிரகாஷ், க.பிரபு, ஜி.பிரதீப்ராஜா, சி.ஆனந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு நேர்காணல் நடத்துகின்றனர்.

எனவே பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் விண்ணப்பித்த அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று, அரியலூர் மாவட்டச்செயலாளரும் போக்குவரத்துத் துறை அமைச்சருமான சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டச் செயலாளர் குன்னம் சி. இராஜேந்திரன் ஆகிய இருவரும் தங்களது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

### அமைச்சர் முனைவர் க. பொன்முடி

# விழுப்புரம் தெற்கு மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2 ) ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ. அறிக்கை!



விழுப்புரம், அக். 14 - விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் தெற்கு மாவட்ட வாக்குச்சாவடி முகவர்கள் (BLA 2 ) இவர்களின் ஆலோசனைக் கூட்டம் 16.10.2023 திங்கள் கிழமை காலை 10.00 மணியளவில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி தலைமையில் தொகுதி பார்வையாளர்கள் க.வேங்கடபதி முன்னாள் ஒன்றிய அமைச்சர், இ.ஏ.பி.சிவாஜி, தாமரைச்செல்வன், இராமகிருஷ்ணன் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற உள்ளது. அவ்வமயம் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் அனைத்து வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2) அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**நிகழ்ச்சி நிரல் :**

1. 16.10.2023 - காலை 10.00 மணி - விழுப்புரம் தொகுதி , விக்கிரவாண்டி தொகுதி.
2. 16.10.2023 - மாலை 3.00 மணி - திருக்கோவிலூர் தொகுதி, வானூர் தொகுதி.

**குறிப்பு:**

1. கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெற உள்ள வாக்குச்சாவடி முகவர்கள் (BLA2 ) ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்வது குறித்து.
2. வாக்காளர் பட்டியல் சேர்த்தல், நீக்கல், சரிப் பார்க்கும் பணி குறித்து .
3. கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் ராசிபுரத்தில் இல்லந்தோறும்

# புதிய இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாம்!

## கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி துவக்கி வைத்தார்!

நாமக்கல், அக். 14 - நாமக்கல் கிழக்கு மாவட்டம் ராசிபுரத்தில் மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் கழகத் தலைவரும், தமிழ்நாடு முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவிப்புக்கிணங்க இல்லந்தோறும் இளைஞர் அணி புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான துவக்க நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில் ராசிபுரம் நகரக் கழகச் செயலாளர் என். ஆர்.சங்கர், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம். கார்த்திக் வரவேற்புரை ஆற்றனார்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி, புதிய இளைஞர் அணி சேர்க்கையை துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் ஆர். விநாயகமூர்த்தி, இளைஞர் அணி நகர துணை அமைப்பாளர்கள் ஓ.புளிமோகன், ஆசைத்தம்பி மணிகண்டன், பாண்டியன், லோகசரவணன், சலீம்.14 வது வார்டு செயலாளர் எஸ். அமிர்தலிங்கம், ஆர்.யோகராஜன், வார்டு இளைஞர் அணியைச் சேர்ந்த கிஷோர், சிவக்குமார், மாணிக்கம், செல்வராஜ், கார்த்திக், லவக்குமார், லோகபிரசாத், கவிபாரதி, சிபி, பரத், கிருஷ்ணன், கே.கே.குமார், வெங்கடேஷ், யுவராஜ் வினோத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாநகராட்சி, 22வது வார்டு குமரானந்தபுரம் மாநகராட்சி உயர்நிலைப் பள்ளியில், 'நமக்கு நாமே' திட்டத்தின் கீழ் ரூ.6.22 லட்சம் மதிப்பீட்டில் 7 புதிய வகுப்பறைகள் கட்டுவதற்கான பணியினை திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளரும் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.மு.நாகராசன், வடக்கு மாநகரச் செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மாவட்ட அவைத்தலைவர் க.நடராசன், 1வது மண்டல தலைவர் உமாமகேஸ்வரி வெங்கடாசலம், மாமன்ற உறுப்பினர்கள் ராதாகிருஷ்ணன், பத்மாவதி கிருஷ்ணகுமார், பகுதி செயலாளர்கள் மின்னல் நாகராஜ், உசேன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.குணராஜ், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பார்த்திபன், வட்டக் கழகச் செயலாளர் ராஜ்குமார், திராவிட பாலு, விஜய் சிம்ம ராஜா, பொறியாளர் கணேஷ் செந்தில் குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகத்தினர் தீவிரமாக ஈடுபடுவீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் அறிக்கை!



திருப்பூர், அக். 14- நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செங்கோடு, குமார பாளையம், பரமத்தி வேலூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் அடங்கிய கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் வாக்குச்சாவடி நிலை முகவர்களுக்கு நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ்நாடு முதலமைச்சரும் கழகத் தலைவருமான முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி இந்திய தேர்தல் ஆணையம் எதிர்வரும் 1.1.2024ம் தேதியை தகுதி நாளாக கொண்டு புகைப் படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்காணும் அட்டவணைப்படி அறிவித்துள்ளது.

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திருச்செங்காடு, குமார பாளையம், பரமத்தி வேலூர் ஆகிய தொகுதிகளில் 27.10.2023 முதல் 9.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும் மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது. இது தவிர 4.11.2023 சனிக்கிழமை 5.11.2023 ஞாயிற்றுக்கிழமை 18.11.2023 சனிக்கிழமை 19.11.2023 ஞாயிறு ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சாவடி மையங்களில் காலை 9:30 மணி முதல் மாலை 5.30 மணி வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர்கள் பட்டியலில் உள்ள தங்களது பெயர் விவரங்களை சரி பார்த்து விடுபட்ட வாக்காளர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்பக்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களைச் சேர்க்க நீக்க திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து அந்தந்த படிவுகளை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

மேலும் விரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023. பெயர்களைச் சேர்க்க, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 9.12.2003 வரை. சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் நாட்கள் 4.11.2023, 5.11.2023 மற்றும் 18.11.2023, 19.11.2023. இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும் நாள் 01.01.2024. மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு பணியிலும் சிறப்பு முகங்கள் நடைபெறும் நாட்களிலும் திருப்பூர் வடக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், ஒன்றிய நகர, பகுதி, பேரூர், வட்ட, வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் மாமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற பிரதிநிதிகள், நகரமன்ற, பேரூராட்சி மன்ற, ஊராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சி குழு, ஒன்றிய குழு உறுப்பினர்கள், நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், மற்றும் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள் (BLA2), பூத் கமிட்டி உறுப்பினர்கள் (Blc), மற்றும் கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு இந்தப் பணியின் விவரத்தினை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் .

குறிப்பு : வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தினர் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள (BLA2) பாகா முகவர்கள் இந்தப் பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்க ப் பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.




மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி மேற்கு ஒன்றியத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம். முருகன் எம்.எல்.ஏ. வழிகாட்டுதலின் படி கொண்டல், வள்ளுவக்குடி ஊராட்சியில் பி.எல்.ஏ.2, பி.எல்.சி பொறுப்பாளர்கள் வள்ளுவக்குடி உள்ளாட்சி பிரதிநிதிகள் கிளைக் கழக நிர்வா கிகள் கலந்து கொண்ட ஆய்வு கூட்டத்தில் கழக மாணவர் அணி தணைச் செயலாளர் மன்னை த.சோழராஜான் பேசினார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர் ஏ.ஜி.ஜெ.பிரபாகரன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், பொதுக்குழு உறுப்பினர் நத்தம் வின்செண்ட், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் எம்.எஸ்.முத்துகுபேரன், ஆர்.எஸ். ஸ்ரீதர், மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### அம்பத்தூர் பா. இரவைக்கண்ணன்

### அக்டோபர் 14 (1992)



**அம்பத்தூர் நகரக் கழகத்தின் செயலாளராக பல ஆண்டுகள் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றுள்ளார். மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.**

**துணிவுமிக்க உள்ளம்! பணிவுமிக்க பண்பாடு! கொள்கையில் உறுதி! குறிக்கோளுக்காக தியாகம் செய்யும் இயல்பு! என தலைவர் கலைஞர் அவர்களால் புகழப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

# “கழக மகளிர் அணி சார்பில் - மகளிர் உரிமை மாநாடு : திருமதி. சோனியா காந்தி பேருரை!

### மெஹபூபா முஃப்தி - பிரியங்கா காந்தி - சுப்ரியாசுலே - முன்னணியினர் பங்கேற்பு! கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை!

சென்னை, அக். 14 -

சென்னையில் கழக மகளிர் அணியினர் முன்னின்று நடத்தும் தமிழினத் தலைவர் கலைஞர் நூற்றாண்டை முன்னிட்டு மகளிர் உரிமை மாநாடு கழகத்தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நாளை (14.10.2023) மாலை நடைபெறுகின்றது.

இதில் அகில இந்திய காங்கிரஸ் கட்சி முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தி பங்கேற்று மாநாட்டு பேருரையாற்றுகிறார்.

இது பற்றிய விபரம் வருமாறு:-

பெண்களின் முன்னேற்றமே சமுதாய முன்னேற்றமென ஓயாது உழைத்தவர் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள், பெண்களுக்குச் சொத்துரிமை, அரசு வேலைகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல்களில் இட ஒதுக்கீடு என மகளிர் உரிமைகளைப் பாதுகாக்கப் பாடுபட்டவர்.

அவரது நூற்றாண்டை முன்னிட்டு, தி.மு.கழக மகளிர் அணி ஒருங்கிணைப்பில், கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் அகில இந்திய அளவில் நாளை (14.10.2023 - சனிக்கிழமை) மாலை 4.30 மணி அளவில் நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. திடலில் நடைபெறவிருக்கும் ‘மகளிர் உரிமை மாநாட்டிற்கு’ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

சமூக நீதி, கண்ணியம் மற்றும் மகளிர் உரிமைகளைப் பாதுகாக்க ஓர் அணியாகத் திரள்வோம் வாருங்கள் என அழைக்கின்றோம்.

இம்மாநாட்டிற்கு கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய முன்னாள் தலைவர் திருமதி. சோனியா காந்தி அவர்கள் மாநாட்டுப் பேருரையாற்றுகிறார்.

இதில் ஜம்மு காஷ்மீர் முன்னாள் முதலமைச்சரும், ஜம்மு - காஷ்மீர் மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவருமான மெஹபூபா முஃப்தி,

காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி, தேசியவாத காங்கிரஸ் கட்சி செயல் தலைவர் சுப்ரியா சுலே,

பீகார் மாநில உணவு அமைச்சரும், ஐக்கிய ஜனதா தளம் தேசிய நிர்வாகக் குழு உறுப்பினருமான லெஷி சிங், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட் பீரோ உறுப்பினர் சுபாஷினி அலி,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர் ஆனி ராஜா, ஆம் ஆத்மி கட்சி தேசிய நிர்வாகக் குழு உறுப்பினரும் டெல்லி சட்டப்பேரவை துணைத் தலைவருமான ராக்கி பிட்லன், திரிணாமுல் காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் சுஷ்மிதா தேவ், சமாஜ்வாதி கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிம்பிள் யாதவ் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

தி.மு.கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. முன்னிலை வகித்து பேசுகிறார்.

தி.மு.கழக மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் வரவேற்றுப் பேசுகிறார்.

தி.மு.கழக மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ராணி நன்றி கூறுகிறார்.




சென்னை. நேரு உள்விளையாட்டரங்கில் 10.10.2023 முதல் 12.10.2023 வரை நடைபெற்ற 45வது அகில இந்திய மின்வாரியங்களுக்கிடையேயான மகளிர் விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு நிதி. மின்சாரம் மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பரிசுகளை வழங்கினார். இவ்விழாவில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன். அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு மின்சார உற்பத்தி மற்றும் பகிர்மான கழக தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் ராஜேஷ் லக்கானி, இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷூ மஹாஜன், மேலாண்மை இயக்குநர் (மின்தொடரமைப்பு), அனைத்து இயக்குநர்கள் மற்றும் உயர் அலுவலர்கள் உடன் உள்ளனர்.




சென்னை மாநிலக் கல்லூரி அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கண்காட்சி மற்றும் இலக்கிய ஆய்வரங்கத்தை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.10.2023) தொடங்கி வைத்து, ஆய்வரங்கத்தில் கலந்து கொண்ட மாணவ மாணவிகளுக்கு கலைஞர் பற்றிய நூல்களை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி, டி.கே.எஸ் இளங்கோவன், பெருநகர சென்னை மாநகராட்சிப் பணிகள் குழுத் தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

### உச்சநீதிமன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் தண்ணீர் தர

## டெல்டா மாவட்டத்தில் முழு அடைப்புப் போராட்டம் வெற்றி!

### தமிழ்நாட்டின் விவசாயத்தைக் காக்கும் முதல்வரின் முயற்சிக்கு உணர்வோடு கைகொடுத்தோருக்கு காவிரிப்படுகை பாதுகாப்பு இயக்கம் நன்றி!

திருவாரூர், அக். 14-

தமிழ்நாட்டின் விவசாயத்தை காத்திட முதல்வர் மு.ஸ்டாலின் அவர்கள்எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் முழுமையாக பலன் தர உச்சநீதிமன்ற இறுதி தீர்ப்பின்படிகர்நாடக அரசு தமிழ் நாட்டிற்கு உரிய அளவு தண்ணீரை திறந்து விட வலியுறுத்திஉச்ச நீதிமன்றத்தின் அறிவுறுத்தலுக்குப் பின் திறக்கப்படும் குறைந்த பட்ச நீரை கூட தடுக்கும் கர்நாடக பாஜக மற்றும் அமைப்புகளை கண்டித்துதமிழ்நாடு அரசு பலமுறை வலியுறுத்தியும் தமிழ்நாட்டு விவசாயிகளைப் பற்றி கவலைப்படாத ஒன்றிய பாஜக அரசை கண்டித்தும்அக்டோபர் 11ஆம்தேதி காவிரி டெல்டா மாவட்டங்களில் காவிரி படுகை பாதுகாப்பு கூட்டு இயக்கம் சார்பில் முழு அடைப்பு மற்றும் மறியல் போராட்டம் நடத்திட அறிவிக்கப்பட்டது.

போராட்டத்திற்கு ஆதரவு அளித்து பங்கேற்க,அனைத்து அரசியல் கட்சித் தலைவர்கள்,வணிகர் சங்கத் தலைவர்களை சென்னையில் சந்தித்து ஆதரவு கோரியபின், டெல்டா மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டம் தஞ்சாவூரில் அறிவிக்கப்பட்ட நிலையில் போராட்டத்தில் உணர்வோடு அனைத்து தரப்பினரும் பங்கேற்றதால் இப் போராட்டம் முழு வெற்றியை பெற்றுள்ளது.

திமுக ,காங்கிரஸ்,சி.பி.ஐ, சி.பி.எம்., ம.தி.மு.க., தி.க, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மமக, எஸ்.டி.பி.ஐ., உள்ளிட்ட அனைத்து அரசியல் கட்சிகள் போராட்டத்தில் உணர்வுபூர்வமாக பங்கேற்று வெற்றி பெற செய்துள்ளனர். பாரம்பரியம் மிக்க வணிகர் சங்கங்களுடன். வணிகர் சங்க பேரமைப்பு வணிகர் நலச்சங்கம் மற்றும் அனைத்து வணிகர்களும் முழுமையாக கடையடைப்பு செய்ததுடன் போராட்டத்திலும் பங்கேற்றனர். வாகன உரிமையாளர்கள் ஓட்டுநர்கள் இதன் இயக்கங்களை நிறுத்தி பங்கேற்று உள்ளனர்.

தொழிலாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள், இளைஞர்கள், மாணவர்கள், வழக்கறிஞர்கள் சங்கம்என போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கில் பெருமளவில் பங்கேற்றனர். பொதுமக்கள் பயணங்களை தவிர்த்து ஆதரவளித்துள்ளனர்.

காவேரி படுகை பாதுகாப்பு கூட்டு இயக்கத்தில் உள்ள திமுக விவசாய அணி தமிழ்நாடு விவசாய சங்கங்கள் (சிபிஎம்.. சிபிஐ) வி.சி.க. ஆகிய அமைப்புகள் இந்த போராட்டத்தை அறிவித்ததுடன் ஒருங்கிணைத்து வெற்றிகரமாக நடத்தியுள்ளன. அனைத்து இடங்களிலும் பல்லாயிரக்கணக்கானோர் பேரணியாகச் சென்று ஒன்றிய அரசு அலுவலகம் முன் மறியல் போராட்டங்களையும். சாலை மறியல் போராட்டங்களையும் கடும் வெயிலையும் பொருட்படுத்தாது கோரிக்கை முழக்கமிட்டு நாள் முழுவதும் நடத்தியது என்பது காவிரியின் நமது உரிமையை நிலை நாட்டுவதாக அமைந்தது. மேலும் பல இடங்களில் கூடுதலாக கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டங்களும் நடந்துள்ளன.

அறிவிக்கப்பட்ட இந்தப் போராட்டம் மிகப்பெரிய வெற்றி அடைந்ததன் எதிரொலியாகத் தான் கர்நாடகம் இன்று 8000க.அடி தண்ணீர் திறப்பதற்கான நிலையை உருவாக்கி இருக்கிறது. ஆகவே தண்ணீரை பெறுவோம் என்கிற நம்பிக்கையுடன் போராட்டத்தில் கலந்து கொண்ட பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் அனைத்து அமைப்புகளுக்கும் நன்றியை காவேரி படுகை பாதுகாப்பு கூட்டியக்கம்தன் இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு திமுக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கநிர்வாகிகள் பி.எஸ்.மாசிலாமணி, சாமி.நடராஜன், விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிர்வாகி பசுமை வளவன், காவிரி டெல்டாவிவசாய சங்கங்களின் கூட்டமைப்பு நிர்வாகி இளைஞன் இளங்கீரன் மற்றும் மக்கள் அதிகாரம், தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் ,அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம் ஆகியோர் இணைந்து கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

### வெள்ளக்கோவில் நகராட்சியில்

## ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகள்!

### அமைச்சர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்!

திருப்பூர், அக். 14 -

வெள்ளக்கோவில் நகராட்சியில் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார்.

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன் 07.10.2023 அன்று மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அ.லட்சுமணன் தலைமையில் திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் நகராட்சி, துரை ராமசாமி நகரில் காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அரசு உயர்நிலைப்பள்ளியில் கட்டப்பட்ட கூடுதல் வகுப்பறை கட்டடம், ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கால் நடை கிளை மருந்தக கட்டடம் என மொத்தம் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்டப் பணிகளை திறந்து வைத்தார்.

அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எந்தவொரு திட்டமானாலும் மக்களுக்கு தேவையான திட்டங்களை உடனடியாக மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் முழுக்கவனம் எடுத்து அரசு செயல்பட்டு வருகிறது. இன்றைய தினம் வெள்ளகோவில் நகராட்சி, துரை ராமசாமி நகரில் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காங்கேயம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கட்டப்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டடத்தை திறந்து வைத்தும், ரூ.48.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கால்நடை கிளை மருந்தக கட்டடத்தை திறந்து வைத்தும் என மொத்தம் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் முடிவுற்ற திட்ட பணிகளை திறந்து வைக்கப்பட்டுள்ளது என அமைச்சர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் தியாகராஜன், உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்புத் துறை) சக்திவேல் பாண்டியன், வெள்ளகோவில் நகர் மன்றத்தலைவர் கனியரசி முத்துக்குமார், வெள்ளகோவில் நகராட்சி ஆணையாளர் வெங்கடேஷ்வரன், மாவட்ட துணை செயலாளர் ராசி கே.ஆர். முத்துக்குமார், நகர கழக செயலாளர் சபரி எஸ்.முருகானந்தம், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சந்திரசேகர், பொதுக்குழு முன்னாள் உறுப்பினர் எம்.எஸ்.மோகனசெல்வம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ராசிபுரத்தில் நடைபெற்ற ஒன்றிய நகர, பேரூர்களில் இல்லந்தோறும் இளைஞர் அணி புதிய உறுப்பினர் சேர்க்கைக்கான துவக்க நிகழ்ச்சியில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். இதில் ராசிபுரம் நகரக் கழகச் செயலாளர் என்.ஆர்.சங்கர், நாமக்கல் கிழக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.கார்த்திக் மற்றும் நகர இளைஞர் அணி நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொறியாளர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு செஞ்சியை அடுத்த ஆலம்பூண்டி ஸ்ரீ ரங்க பூபதி பொறியியல் கல்லூரியில்நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் பரிசு மற்றும் கேடயங்களை வழங்கி பாராட்டு தெரிவித்தார். உடன் மாநிலப் பொறியாளர் அணி தலைவர் துரை கி.சரவணன், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், மாவட்ட அமைப்பாளர் செந்தில்குமார் உள்ளனர்.

# உடன்பிறப்பே... 27

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையைக் கட்டியெழுப்பி, இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த நடிகமணி டி.வி.நாராயணசாமி அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# நடிகமணி டி.வி.நாராயணசாமி:
# கழகத்தின் கொள்கை மணி!




“கலைத்தாய் எனக்களித்த முதல் புதல்வன் டி.வி.நாராயணசாமி. **‘சிவாஜி கண்ட இந்து ராஜ்யம்’** நாடகத்தை அவருக்காகவே எழுதினேன். அதில், தளபதி சந்திரமோகன் வேஷத்தில் நாராயணசாமியும், காசிவாசி காகபட்டர் வேஷத்தில் நானும் நடித்தோம். வெறும் கணேசனை **‘சிவாஜி’** கணேசனாக மாற்றியவர் அவர். எனக்குப் பல சிக்கல்கள் தீர உதவிபுரிந்தார். அவரது திருமலை நாயக்கர் வேஷம் அற்புதமானது. கொண்ட கொள்கைக்காக என்னிடம் வந்தவர்.

கே.ஆர்.ராமசாமி, எம்.ஜி.ஆர், எஸ்.எஸ்.ஆர் ஆகியோரை இயக்கத்தின் பால் ஈடுபாடு கொள்ளச் செய்தவர் அவர். இவர்களை எல்லாம் அவ்வப்போது எனக்கு அறிமுகம் செய்து வைத்து, என்னிடம் கொண்டு வந்து சேர்த்த பெருமை நாராயண சாமியையே சேரும். அவர் என் நண்பர். நடிகமணி மட்டுமல்ல கொள்கை மணியும்கூட!” என்று பேரறிஞர் அண்ணாவால் போற்றப்பட்டவர் நடிகமணி டி.வி.நாராயணசாமி.

திரையிலும் கழகத்திலும் எப்போதும் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளாது, கட்சித் தலைமைக்குக் கட்டுப்பட்டு வாழ்ந்த நட்சத்திரத்தின் தியாக வரலாறு இது.

## நெல்லையில் உதித்த நட்சத்திரம்!

அன்றைய நெல்லை மாவட்டம், எட்டயபுரம் அருகேயுள்ள சிந்தலைக்கரை துரைச்சாமிபுரம் எனும் சிற்றூரில், வீரப்பன் - வேலம்மாள் இணையருக்கு 1921-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21-ஆம் தேதி மகனாகப் பிறந்தார் டி.வி. நாராயணசாமி. நான்காம் வகுப்பு வரை படித்த இவர், 1931-இல் கிராம மக்கள் தயாரித்து நடத்திய **‘இலவ குசா’** நாடகத்தில் இலவனாக நடித்து, கிராமத்தினரின் பாராட்டைப் பெற்றார்.

பின்னர், எட்டயபுரம் இளைய ஜமீந்தார் ஓவியக் கலைவள்ளல் காசி விஸ்வநாத பாண்டியனின் **‘தேவராஜ ஜெகதீச பாலகான சபா’**வில் 1932-இல் சேர்ந்து **‘பக்த பிரகலாதா’** நாடகத்தில் பிரகலாதன் வேடத்தில் நடித்து பால கதாநாயகனாக உருவானார்.

பிறகு 1936-இல் டி.கே.எஸ். சகோதரர்களின் ‘மதுரை பால சண்முகானந்த சபா’வில் சேர்ந்தார். அங்கு புராண, சரித்திர, சமூக நாடகங்களில் நடித்துப் புகழ்பெற்றார். குறிப்பாக, ‘இராமாயணம்’ நாடகத்தில் இலட்சுமணன் வேடத்தில் சிறப்பாக நடித்தார் டி.வி.என். அந்தக் குழுவில் இருந்தபோது, தந்தை பெரியாரின் ‘குடிஅரசு’ பதிப்பக நூல்களைப் படித்து, சுயமரியாதை இயக்கத்தில் பற்று கொண்டார்.

## கொள்கைப் பற்றும், அண்ணா பற்றும்

இந்நிலையில், பேரறிஞர் அண்ணாவை சந்திக்கும் வாய்ப்பு எப்படி ஏற்பட்டது என்பது பற்றி, அண்ணா பரிமளம் தொகுத்த **‘அறிஞர் அண்ணாவின் வாழ்க்கை வரலாறு’** எனும் நூலில் டி.வி.என். இவ்வாறு நினைவுகூர்ந்திருக்கிறார்.

“1940-ஆம் வருடத் துவக்கத்தில், புகழ்பெற்ற அவ்வை டி.கே.சண்முகம் சகோதரர்களின் நாடக சபை ஈரோட்டில் நல்ல நாடகங்களை நடத்தி வந்தது. அதில் பால நடிக னாகப் பணியாற்றிக் கொண்டிருந்த எனக்கு தந்தை பெரியாரிடத்தி லும், பேரறிஞர் அண்ணா விடத்திலும் பழகிடும் வாய்ப்பு கிடைத்தது. திராவிட இயக்கப் பகுத்தறிவுக் கொள்கைப் பற்று கொண்ட என்னை, பெரியவர் சங்கரைய்யா அண்ணாவிடம் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தினார். அந்த நாள் முதல் எனது கொள்கைப் பற்றோடு, அண்ணா பற்றும் சேர்ந்து கொண்டது. அண்ணா விடம் நேசம் கொண்டேன்” என்கிறார் டி.வி.என்.

> ‘எனது அரசியல் குரு, வழிகாட்டி’ என்று நடிக மணியைக் குறிப்பிட்டுள்ளார் கவிஞர் கண்ணதாசன்.
>
> முத்தமிழறிஞர் கலைஞரின் **‘அம்மை யப்பன்’**, **‘மணிமகுடம்’** போன்ற நாட கங்களிலும், **‘பராசக்தி’** உள்ளிட்ட திரைப்படங்களிலும் டி.வி.என். நடித்திருக்கிறார். **‘மணிமகுடம்’** திரைப்படமான போது அதை நடிகமணி தயாரித்தார்.

நாள்தோறும் அண்ணாவை சந்தித்து அறிவுரை களைக் கேட்பதைத் தனது கடமையாக வைத்தி ருந்தார் டி.வி.என். அத்துடன், ‘உங்கள் எழுத்து கலைநயத்தோடு இருக்கிறது. நீங்கள் நாடகம் எழுதி, அதில் நான் நடிக்க வேண்டுமென விரும்புகிறேன். சீர்திருத்த நாடகங்களை எழுதுங்கள். அதில் நடிக்க நான் வந்துவிடுகிறேன்’ அன்பு வேண்டுகோளை அண்ணாவிடம் வைத்தார். இதனை அண்ணாவின் பேருள்ளமும் ஏற்றுக் கொண்டது. அவரது **‘சந்திரோதயம்’** நாடகத்தில் அண்ணாவோடு, சீர்திருத்த வாலிபன் வேடத்தில் நடித்தார் டி.வி.என்.

## கழகத்தில் கலந்த கலை

சுயமரியாதைக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு நாடகக் குழுவி லிருந்து வெளியேறிய டி.வி.என்., 1944-இல் குடந்தையில் நடைபெற்ற முதலாவது திராவிட மாணவர் மாநில மாநாட்டில் கலந்து கொண்டார். அந்த மாநாட்டில் பேசிய அண்ணா, **“நம்மோடு கலந்துவிட்டார் டி.வி.என். நமக்கென்று கிடைத்திட்ட நடிகமணியை இம்மாணவர் மாநாட்டில் அறிமுகப்படுத்துவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்”** என்றார்.

பின்னர் அண்ணாவின் பரிந்துரையின் பேரில், கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன், நடிகமணிக்கு ஜூபிடர் பிக்சர்ஸ் நிறுவனத்தில் திரைப்படங்களில் நடிப்பதற்கான வாய்ப்பைப் பெற்றுத் தந்தார். கலைவாணரின் நாடகங்கள், திரைப்படங்கள் ஆகியவற்றில் நடிக்கும் நேரம் போக, இதர சமயங்களில் கழகக் கூட்டங்களில் பேசி, கழகத்தவரின் பேரன்புக்கு உரியவரானார்.

இந்த சமயத்தில் திருவாரூர் ரயிலடியில் நடிகமணியைச் சந்தித்த முத்தமிழறிஞர் கலைஞர், அவரை திருவாரூர் பாவேந்தர் பாரதிதாசன் விழா வில் உரை நிகழ்த்த அழைத்தார். அப்படித்தான் கலைஞருடன் அவருக்கு அறிமுகம் தொடங்கியது. 1949-இல் தி.மு.க. தொடங்கப்பட்டபோது **‘நடிப்பிசைப் புலவர்’** கே.ஆர்.இராமசாமி, ‘நடிக மணி’ டி.வி.நாராயணசாமி ஆகியோரை கலைத்துறை சார்பில் பொதுக்குழு உறுப்பினர்களாக அண்ணா நியமித்தார்.

## தேர்தல் களத்தில் தளபதி

1957-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. வேட்பாளராக **‘இலட்சிய நடிகர்’ எஸ்.எஸ்.ஆர்,** தேனி சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டபோது, அவருக்குத் தேர்தல் முகவராகச் சிறப்பாகப் பணியாற்றினார் நாராயணசாமி. அந்தத் தேர்தலில் எஸ்.எஸ்.ஆர் வெற்றி வாய்ப்பை இழந்தாலும், சுமார் 32 ஆயிரம் வாக்குகள் பெற்று பலரின் கவனத்தை ஈர்த்திருந்தார். அதற்கு முழுமுதற் காரணம் தேர்தல் பிரச்சார தளபதியாகச் செயலாற்றிய நடிகமணியின் உழைப்புதான்.

தொடர்ந்து, 1962-சட்டமன்றத் தேர்தலில், நாராயணசாமியை மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடச் செய்ய வேண்டுமென்று அந்தப் பகுதி கழகத்தினர் அண்ணாவிடம் விண்ணப்பித்தனர். அப்போது தேனியில் மீண்டும் போட்டியிட எஸ்.எஸ்.ஆர் விரும்ப, அவருக்கு உதவும்படி நாராயணசாமியைக் கேட்டுக் கொண்டார் அண்ணா. அதைச் சிரமேற்கொண்டு, எஸ்.எஸ்.ஆருக்குத் தேர்தல் பணியாற்றினார். அந்தத் தேர்தலில் எஸ்.எஸ்.ஆர் வெற்றி பெற்றார்.

தேனியில் பெற்ற வெற்றி, மதுரை, கம்பம், ராமநாதபுரம் எனத் தென்பகுதிகளிலும் எதிரொலித்து, கழகத்தை வலுப்படுத்த உதவியது டி.வி.என். காட்டிய உழைப்பு.

## தோல்வியிலும் பெருந்தன்மை!

1967- சட்டமன்றத் தேர்தலில் தி.நகர் தொகுதியில் போட்டியிட டி.வி.என். தேர்வு செய்யப்பட்டார். ஆனால், எதிர்பாராத வகையில் தி.மு.க.வோடு தேர்தல் உடன்பாடு கொண்டிருந்த தமிழரசுக் கட்சித் தலைவர் சிலம்புச் செல்வர் ம.பொ.சி. கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தத் தொகுதியை அண்ணா விட்டுக்கொடுத்ததால், டி.வி.என். தேர்தலில் நிற்கும் வாய்ப்பை இழந்தார். அந்தத் தியாகத்துக்காக கழகம் ஆட்சியில் அமர்ந்தவுடன் நடிகமணியைச் சட்டமன்ற மேலவை உறுப்பினராக்கி னார் அண்ணா.

1971- சட்டமன்றத் தேர்தலில் தி.நகர் தொகுதியில் நாராயணசாமியை வேட்பாளராக நிற்க வைத்தார் கலைஞர். வெறும் 500 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி வாய்ப்பை இழந்தார் டி.வி.என். ‘இந்தத் தேர்தல் முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டாம், வழக்குத் தொடரலாம்’ என்று கழகத்தினர் கூறிய போதும், ‘ஜனநாயக முறைப்படி நான் தோற்று விட்டேன். வழக்கு வேண்டாம்’ என்று பெருந்தன்மை யாக நடந்துகொண்டார் டி.வி.என்.

“திருவாரூர் வீதிகளிலே கொடிபிடித்த கை கருணாநிதியின் கை! சுவர்களிலே ஏணி வைத்து ஏறி போஸ்டர் ஒட்டிய கை, கருணாநிதியின் கை! இதோ மேடையில் வீற்றிருக்கிற நடிகமணிக்கு, திருவாரூர் கூட்டத்திற்கு வந்தபோது அவரை கிணற்றடிக்கு அழைத்துச் சென்று கிணற்றிலிருந்து வாளி வாளியாகத் தண்ணீர் இறைத்து ஊற்றிவிட்ட கை இந்தக் கை!” என்று கலைஞரால் போற்றப்பட்ட நடிகமணி டி.வி.என். 2000-ஆம் ஆண்டு நவம்பர் 22 அன்று முதுமை காரணமாக மறைந்தார். ஆனால், அவர் கழகத்துக்கு அளித்த பங்களிப்பு என்றும் மறையாது!

...துடிக்கும்

## விளையாட்டில் விளையாடிய ‘குஜராத் மாடல்’

சமீபத்தில் நடந்து முடிந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியா 107 பதக்கங்களை வென்றது. மாநில வாரியாகப் பதக்கம் வென்றவர்கள் பட்டியலில் ஹரியானா 44 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது. பஞ்சாப் 32 பதக்கங்களும், மகாராஷ்டிரா 31 பதக்கங்களும், தமிழ்நாடு 28 பதக்கங்களையும் பெற்றுள்ளன. இந்தப் பதக்க வரிசையில் குஜராத் மாநிலம் இடம்பெறவே இல்லை. ஆனால், அந்த மாநில விளையாட்டுத் துறைக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய தொகைதான் தற்போது பேசுபொருளாக மாறியுள்ளது.

28 பதக்கங்களை வென்ற தமிழ்நாட்டுக்கு ஒதுக்கிய தொகை வெறும் ரூ.33 கோடிதான். ஆனால், எந்தப் பதக்கத்தையும் பெறாத குஜராத் மாநிலத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த தொகை ரூ.608 கோடி. பா.ஜ.க. ஆளும் மாநிலமான உத்தரப் பிரதேசத்துக்கு ரூ.503 கோடி ஒதுக்கியுள்ளனர். ஒட்டுமொத்த நாட்டுக்கும் ஒதுக்கப்பட்ட ரூ.2,754 கோடியில் அவர்கள் நீண்ட காலமாக ஆளும் இரண்டு மாநிலங்களுக்கு மட்டும் 40 சதவிகிதத் தொகையை ஒதுக்கி இருக்கின்றனர். இந்தியாவில் உள்ள இதர மாநிலங்கள் அனைத்தும் 60 சதவிகிதத்தைப் பிரித்துக் கொண்டுள்ளன. இந்த ஓரவஞ்சனைக்குப் பெயர்தான் ‘பாரத்’. குஜராத்துக்குக் கொடுக்கும் நிதி எங்கு செல்கிறது என்பது குறித்து விசாரணை நடத்த வேண்டும் எனக் குரல்கள் வலுத்து வருகின்றன. ‘குஜராத் மாடல்’ என்பது அப்பட்ட மான மோசடி என்பதை விளையாட்டிலும் காட்டிவிட்டனர்.

## ஃப்ளாஷ்பேக்





### ‘இளைஞர்’ சேர்க்கை!



அருண்பிரசாத்

1980-ஆம் ஆண்டு மதுரை ஜான்சிராணி பூங்காவில் நடைபெற்ற பிரமாண்ட மாநாட்டில், தி.மு.க. இளைஞர் அணி தொடங்கப்பட்டதை அடுத்து, இன்றைய தமிழ்நாடு முதலமைச்சரும் அன்றைய இளைஞர் அணி செயலாளருமான தளபதி அவர்கள் தமிழ்நாடு முழுவதும் பயணித்து இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கைப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். அதன் ஒரு பகுதியாக 1983-ஆம் ஆண்டு என் தந்தை ‘ஈரோடு’ ராம்கி (எ) ராமகிருஷ்ணன் அவர்கள், ஈரோடு நகர் பகுதியில் ஏற்பாடு செய்திருந்த இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமுக்கு தலைவர் தளபதி அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார். கழகத் தோழர்களோடு இணைந்து மதிய உணவும் உட்கொண்டார். என் தந்தை மறைந்த போது தளபதி அவர்கள் நேரில் அழைத்து, ஆறுதல் தெரிவித்த நிகழ்வு இப்படத்தைப் பார்க்கும்போதெல்லாம் நினைவுக்கு வரும்.

**-இரா.அருண்பிரசாத், கோட்டை பகுதி, ஈரோடு நகரம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### ஜனநாயகப் பரீட்சை!

**1955-ஆம் ஆண்டில் சென்னை கோகலே அரங்கில் உரையாற்றிய பேரறிஞர் அண்ணா, கழகம் தேர்தலில் நிற்பதற்கான வாக்கெடுப்பு குறித்துக் குறிப்பிட்டார். அப்போது பேசுகையில், “தி.மு.கழகம், அடிமைப்பட்டிருக்கும் ஒரு நாட்டை மீட்கும் பணியில் ஈடுபட்டி ருக்கிறது. நாடெங்குமுள்ள சட்டசபை களை – ஆட்சி மன்றங்களை ஜன நாயக ரீதியாக நடைபெறும் தேர்தல் களின்போது கைப்பற்றித் தொடர்ந்து வரும் தொல்லைகளைச் சமாளித்து விடுதலையைப் பெறும் வழியை தி.மு.கழகம் பரீட்சித்துப் பார்க்க விருக்கிறது” என்றார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 269




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131